கோகுலம்


GOKULAM ஆகஸ்ட் '97 ரூ. 5/-




ON THE AUSPICIOUS OCCASION OF 50 YEARS OF INDIA'S INDEPENDENCE

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS






Cartoonist Pran's

CHACHA CHAUDHARY &
SABU'S NEW ISSUE

CHACHA CHAUDHARY AND TRICOLOUR


DIAMOND COMICS


1000th SPECIAL ISSUE





















NEW AMAR CHITRAKATHA
(Price Rs. 25/- Each)

- Krishandeva Raya
- Ancestors of Rama
- Tales of Narada
- Yayati • Surya
- Dhruva and Ashtavakra

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these.I promise to accept the V.P. every month.

NAME ________________

ADDRESS ________________

POST OFFICE ________ PIN CODE ________


I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbato **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

ஆகஸ்ட் 1997
மலர்: 15 இதழ்: 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.



அருமைச் சிறுவர், சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இதே மாதம் பதினைந்தாம் நாள் நம் பாரதம் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து சுதந்தரம் பெற்றது.

வணிகர்களாக இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்த பிரிட்டிஷார் குறுநில மன்னர்களின் ஒற்றுமையின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு, சிறிது சிறிதாக ஆட்சியதிகாரத்தைத் தாங்களே எடுத்துக் கொண்டு, இந்தியாவையே தங்கள் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தினர்.

இந்தியத் தலைவர்கள் காந்தியடிகள் தலைமையில் மக்களை ஒன்று திரட்டி சுதந்தரப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக்கிவிட, இலட்சக்கணக்கான மக்கள் தாங்களே சிறை புகுந்த செயல் ஆங்கில ஆட்சியாளரைக் கலங்க வைத்தது. போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் அனுபவித்த இன்னல்கள், கொடுமைகள் சொல்லி மாளாது. எல்லா வசதிகளையும் பெற்றிருந்த எண்ணற்றவர்கள் தங்கள் தனிப்பட்ட சுக வாழ்வைத் துச்சமாகத் துறந்து, சுதந்தர வேள்வியில் தங்களை அர்பணித்துக் கொண்டனர். இவர்களது தியாகம் வீண் போகவில்லை. இவர்கள் கண்ட கனவு பலித்து இந்தியா சுதந்தரம் பெற்றது.

இந்திய சுதந்தரம் உலக அரங்கில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வழி காட்டியது. இந்தியாவைத் தொடர்ந்து காலனி ஆதிக்கத்தில் இருந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் போராடி விடுதலை பெற்றன. நூற்றி ஐம்பது வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் அடிமைப் பட்டுக் கிடந்த ஹாங்காங் இந்தப் பொன்விழா ஆண்டில்தான் விடுதலையடைந்து சீனாவுடன் இணைகிறது.

உண்மையில் திலகர், காந்தியடிகள், மோதிலால் நேரு, படேல், நேருஜி, வ.உ.சி. இராஜாஜி போன்ற மாபெரும் தலைவர்களின் தியாகத்தையெல்லாம் விலையாகக் கொடுத்தே நாம் சுதந்தரத்தைப் பெற்றுள்ளோம்.

இந்திய சுதந்தரப் பொன்விழா ஆண்டில், சுதந்தரத்தைப் பெற்றுத் தந்த நமது தலைவர்களின் தியாக உணர்வும், ஒற்றுமை உணர்வும், பொறுமையும், விட்டுக் கொடுக்கும் தன்மையும், மாநிலம் மொழி, ஜாதி இனம் கடந்த இவர்களின் பரந்த நோக்கும் நமக்கும் வர வேண்டும் என்று பாரத அன்னையை வேண்டுவோம். இன்றைய தேவை இவையே! இவையே நமது சுதந்தரத்தைக் காக்கும் கவசங்கள்!

இந்த இதழில் உதயன் நம்மிடம் பிரியா விடை பெற்று "உதயன் எங்கே?" தொடரை முடித்துக் கொள்கிறான். புதிய தொடர்கதையைப் பற்றிய அறிவிப்பும் தனியே வெளியாகியுள்ளது.

அனைவருக்கும் சுதந்தர தின வாழ்த்துகள்.

அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

ஆகஸ்ட் 1997

இந்த இதழில்...



* ஆதிவாசிகள் குடிசை

இந்திய சுதந்தரப் போராட்டத்தில், திருப்புமுனையாக அமைந்த பெருமை பல நிகழ்ச்சிகளுக்கு உண்டு. வரிகொடா இயக்கம், ஒத்துழையாமைப் போராட்டம், உப்பு சத்யாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், ஜாலியன்வாலாபாக் படுகொலை, அந்நியத் துணி எரிப்புப் போராட்டம், சுதேசி கதர் இயக்கம் போன்றவை இவை. இந்தப் போராட்டங்களில் இந்தியாவின் முக்கிய நகரங்கள் பலவும் தீவிரமாகப் பங்கு கொண்டு பெருமை பெற்றன. தாய்நாட்டிலிருந்து சற்றுத் தள்ளி இருந்தாலும், ஆயுள் தண்டனை பெற்ற தீவிரவாத தேச பக்தர்கள் பலரைத் தன்னிடம் அடக்கிக் கொண்ட பெருமை அந்தமான் தீவுகளுக்கு உண்டு.

இந்தியாவின் தென்கோடி முனை எது என்று கேட்டால் பலரும் சொல்லக்கூடிய பதில் கன்யாகுமரி என்பதுதான். இந்த பதில் தவறு. இந்திரா முனை (Indira point) என்பதுதான் சரியான பதில்.

'இந்திரா முனை'யா! அது எங்கிருக்கிறது என்று கேட்கிறீர்களா? அந்தமான்

தீக்குஞ்சுகள் சிறையிருந்த தீவு!

நிகோபர் தீவுகளுக்கு...

அந்தமான் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது சரித்திரப் புகழ் வாய்ந்த செல்லுலர் சிறையாகத்தான் இருக்க முடியும். இதோடு தென்கிழக்கு ஆசியாவின் பழைமை வாய்ந்த மிகப் பெரியதாயிருந்த 'சாத்தம்' மரம் அறுக்கும் ஆலை, அழகிய வண்டூர் கடற்கரை ஆகியவையும் கூட அந்தமானின் சிறப்பு தான்!



• நாகரீக ஆதிவாசி இளைஞர், பெண்கள்

நம் நாடு ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்து போராட்டம் நடத்தி விடுதலை பெற்றதை அறிவீர்கள். இந்த விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் அந்த மானுக்கும் உண்டு. அடிமை இருளுக்கு எதிராகப் பிறந்த சுதந்திரத் தீப்பொறி மெல்ல மெல்ல வலிமை பெற்று விடு தலைப் போராட்டமாகக் கொழுந்து விட்டெறிந்ததைக் கண்டு ஆங்கில ஆட்சி அதிர்ந்தது. 'இந்தப் பொறியை எப்படி அணைப்பது' என்று தவித்து முடிவில் 'இந்த அக்னிக் குஞ்சு' களை நாடு கடத்தி தனிமைப் படுத்தி விட்டால், அணைந்து விடும் என்று முடிவெடுத்தார்கள்.

கடல் சூழ்ந்துள்ளதால், உப்பு நீரில் 'சுதந்திர வேட்கைத் தீ' அணைந்து விடும் என்ற நம்பிக்கையில் மக்களின் மனம் கவர்ந்த முக்கிய தீவிர சுதந்திரப் போராட்ட வீரர்களை 1838-ஆம் ஆண்டு நாடு கடத்தினர். தாய் நாட்டில் அங்குமிங்குமாய்த் தனித் தனியாகச் சிதறி ஒளி சிந்தித்



• ஆதிவாசிகள் நடனம்

தவித்திருந்த இந்த அக்னிக் குஞ்சுகளுக்கு ஒரே இடத்தில் திரளும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் சுதந்தர ஜ்வாலை இன்னும் பெருகி வேகம் பெற்றது!

இதை வளர அனுமதித்தால் நம்மையே அழித்து விடும் எனப் பயந்த ஆங்கில அரசு அக்னிக் குஞ்சுகளைத் தனிமைப் படுத்தி, சிறு சிறு கூண்டுக்குள் அடைக்கத் திட்டமிட்டது. 'இதற்கென உருவானது தான் 'செல்லுலர் ஜெயில்'. 1896-ஆம் ஆண்டில் செல்லுலர் ஜெயில் கட்ட ஆரம்பித்த போதே, சுதந்திரப் போராட்ட வீரர்களின் மிகத் துயரமான அத்தியாயங்கள் தொடங்கப்பட்டு விட்டன. 1906-ஆம் ஆண்டு இந்த ஜெயில் கட்டி முடிக்கப்பட்ட பின் ஆங்கிலேயர்களின் கொடுமைகள் அதிகமாயின.

தான்தான் போர்ட் ஃப்ளையரின் கடவுள் எனக் கூறிக் கொண்டு ஜெயிலர் டேவிட் பேரி என்பவர் செயல்பட்டார். 'கைகள் இரண்டையும் இரும்புச் சங்கிலியில் கட்டித் தொங்க விடுதல்' 'வீரர்களை இரும்புச் சட்டங்களில் பூட்டி அனைவரும் பார்த்துப் பார்த்து பதைபதைக்கும் படி அடித்து சித்ரவதை செய்தல்' போன்றவை பேரிக்குப் பிடித்த பொழுதுபோக்குத் தண்டனை முறைகள்.

அந்தமான் சிறையில், ஜெயிலர் டேவிட் பேரியின் கொடுமை தாளாமல் பலரும், சுகாதாரமற்ற ஆரோக்கியக் குறைவான உணவு காரணமாகப் பாதிக்கப்பட்டு பலரும், தூக்கு தண்டனை இடப்பட்டுப் பலரும் தங்கள் இன்னுயிரை பாரதத் தாயின் விடுதலைப் போராட்டத்துக்கு அர்ப்பணித்துத் தியாகிகள் ஆனார்கள்.

'பகத்சிங்'கின் தோழரான 'மஹாவீர் சிங்' இச் சிறையில் இருந்தபோது தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து மற்றவர்களுடன் உண்ணாவிரதம் இருந்தார். உண்ணாவிரதத்தை முறியடிக்க ஜெயிலர்களால் வலுக்கட்டாயமாக எடுக்கப்பட்ட வன்முறை காரணமாக உணவு ஊட்டப்பட்டு சிலர் உயிர் துறந்தனர்.

இவ்வீரர்களின் தியாக நினைவாய் இன்று அந்தமானில் இருப்பவை எஞ்சி நிற்கும் சிறையின் மூன்று பிரிவுகளே. கட்டப்பட்டபோது ஒரு சிறு கோபுரத்தை மையமாக வைத்து ஏழு பிரிவுகளாய் மூன்று அடுக்குகளில் மொத்தம் 696 - தனியறைகளைக் கொண்டிருந்ததது இந்தச் சிறை.

ஒருவர் படுக்கும் அளவுக்கு மட்டுமே இடம் விடப்பட்ட சிறு சிறு அறைகளைத் தவிர, மற்ற வசதிகள் எதுவுமே இல்லாமல் கட்டப்பட்டதால் இது செல்லுலர் (Cellular Jail) எனப் பெயர் பெற்றது.


வலுவான வகை வகையான மரங்களை வழங்குவது போர்ட் ஃப்ளையருக்கு மிக அருகில் உள்ள சாத்தம் தீவுகள். இங்குள்ள சாத்தம் மரம் அறுக்கும் ஆலை (Chatham saw mill) உலகப் புகழ் பெற்றது. ஆலையின் கதையும் நூற்றாண்டு கதைதான்.

குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்களின் மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் தென்கிழக்கு ஆசியாவில் மிகப் பெரிதாயிருந்த இவ்வாலை 1883-ஆம் ஆண்டு துவங்கப்பட்டதாக அறியப்படுகிறது.


காட்டில் துள்ளித் திரியும் புள்ளி மான்கள், கடலில் கலைநயத்துடன் டைவ் அடிக்கும் டால்பின்கள் என, தனக்கென்று சிறப்பான உயிரினங்களைப் பெற்றுத் தனிச் சிறப்புடன் திகழ்கிறது இத் தீவுகள். நாம் கப்பலில் செல்லும்போது, துள்ளி எழுந்து நம்மை எதிர் கொண்டு

கொடி வணங்குவோம்!

ஒவ்வொரு நாட்டின் கொடிக்கும் தனி அமைப்பு உண்டு. அவற்றிலுள்ள வண்ணங்களுக்கும் தனிப் பொருள் உண்டு. நமது தேசியக் கொடியின் வரலாறு சுமார் 90 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். பல மாற்றங்களைக் கடந்து முதல் சுதந்தர நாளன்று இப்போதுள்ள உருவத்தைப் பெற்றது. இதிலுள்ள காவி நிறம் வீரம் தியாகத்தையும்; வெண்மை உண்மை, அமைதியையும்; பச்சை நம்பிக்கை, நற்பண்பையும் 24 ஆரக்கால் (SPOKES) கொண்ட அசோகச் சக்கரம் தர்மம், சத்தியம், முன்னேற்றத்தையும் குறிக்கின்றன. இந்த மூன்று வண்ணங்களும் சம அகலத்தில் இருக்க வேண்டும். கொடியை வணங்குவது பாரத அன்னையையே வணங்குவதாகும்.



அட்டையில் தேசியக் கொடியை அணிந்து மகிழ்வது ரேணுகா, கோகுல்.
வண்ணப்படம் : ஸ்ரீஹரி



* புகழ் பெற்ற செல்லுலர் சிறைச்சாலை

வரவேற்கும் டால்பின்களின் (Dolphins) அன்பு வரவேற்பு, இந்திய கலாச்சார அடிப்படை அன்பை உணர்த்தும்.

'எல்லாமே சரித்திரம்தானா? ஜாலியாக இருப்பதற்கு ஒன்றுமே இல்லையா' எனக் கேட்கிறீர்களா? இருக்கவே இருக்கிறது வண்டூர் ஜாலிபாய் பயணம் (Vandoor to Jolly Buoy)

பாரதத்திலிருந்து வந்துள்ள தமிழர், தெலுங்கர், வங்காளியர், மலையாளி என அனைத்து மொழியினரும் இங்கு ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள்.

இத்தீவுக்குரிய பழங்குடியினர் நிகோபாரீஸ் (Nicobarese) ஜர்வா (Jarawa) கிரேட் அந்தமானிஸ் (Great Andamanese), ஓங்கி (Onge), ஸென்டினலிஸ் (Sentinelese) எனும் ஐந்து பிரிவினர். நிகோபார் இனத்தவர் இன்றைய மாறி வரும் நாகரிகத்திற்கு ஈடு கொடுத்து முன்னேறி விட்டார்கள். ஆனால் அடிப்படை நாகரிகம்கூட வளராமல் ஆதிமனிதர்களாய் இலை தழைகளால் பின்னப்பட்ட மிகக் குறைந்த ஆடைகளுடன், சமைக்காத உணவை உண்டு, தென் மற்றும் மத்திய அந்தமானின் மேற்குக் கடற்கரை ஓரமுள்ள அடர்ந்த காடுகளையே தங்கள் இருப்பிடங்களாகக் கொண்டு வெளி உலகத் தொடர்பற்று வாழ்பவர்களும்கூட இன்னமும் இருக்கிறார்கள். இவர்கள் ஜர்வா இனத்தினர். இவர்களை நாகரிகப்படுத்த அரசாங்கம் பல வழிகளில் முயன்று வருகின்றது.

இப்பழங்குடியினரின் புகைப்படங்கள், அவர்கள் பயன்படுத்தும் கருவிகள், படகுகள் ஆகியவற்றை போர்ட் பிளையரிலுள்ள அருங்காட்சியகத்தில் (Anthropological Muesum) காணலாம். அன்றைய ஆங்கில அரசால் கட்டப்பட்ட அலுவலர்களுக்கான தங்கும் மாளிகைகளை, இன்று இடிந்த நிலையில் ராஸ் (Ross Island) தீவில் காணலாம். இவைகளும் தீவுகளில் மரம் சேகரிக்க உதவும் யானைகளின் பணியும் இங்கு அவசியம் காண வேண்டியவை.

இந்திய சுதந்திரத்தின் பொன்விழா நெருங்கும் இந்த நேரத்தில் இங்குள்ள செல்லுலர் சிறைச்சாலையும், கொட்டடியும் 'கண்ணீர் விட்டா வளர்த்தோம்?'' என்ற பாரதியின் பாடலை நினைவுபடுத்தி தியாகிகளை நினைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்த வைக்கிறது.

இச் சிறைச்சாலையை 1969-ஆம் ஆண்டு நம் இந்திய அரசு தேசிய நினைவுச் சின்னம் (National Memorial) என அறிவித்துப் பாதுகாத்து வருகின்றது.

— இராம் ஜீஸஸ்

கோடை விடுமுறைப் போட்டி - II முடிவு

கலந்து கொண்டவர்களுள் பெரும் பாலோர் சரியான விடையே எழுதியிருந்த தால் குலுக்கல் முறையே பரிசுக்குரியவர் களைத் தேர்ந்தெடுக்க உதவியது.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர்.

1. ஜெ. மாலதி, ரெய்ச்சூர், கர்நாடக மாநிலம். 2. ச. இளங்கதிர், மீனாட்சி பேட்டை, புதுவை - 9. 3. ஜெ. முனீஸ் வரன், திருநின்றவூர், செங்கை அண்ணா மாவட்டம். 5. வீரலட்சுமி கண்ணப்பன், கொழும்பு - 13, ஸ்ரீலங்கா. 6. எஸ். தஹ் ஸீன் நிலோஃபர், வெளிப்பட்டணம், இராமநாதபுரம். 7. சு. ஜெயம், கல்குறிச்சி (அஞ்சல்), காமராஜர் மாவட்டம் - 517 588. 8. செ. ஜான் பீட்டர், தாசுகுப்பம். 9. பீ. சில்பா சீனிவாசரெட்டி, சிவராம் பெட், மைசூர். 10. ஜெ. நவரத்னா, பொள்ளாச்சி.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

என்ன பழமொழிகள்? - போட்டி முடிவு

இதிலும் கூடக் கலந்து கொண்ட பெரும் பாலானவர்கள் சரியான விடையே எழுதியிருந் ததால் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே உதவியது.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர்.

1. ச. செல்வராஜ், குருசாமி பாளையம். 2. கே. ராஜேஸ்வரி, கோவிலூர் (அஞ்சல்). 3. திவ்யா சாய்நாத், பூனா. 4. வி. பச்சியம் மாள், பிள்ளைநல்லூர் (அஞ்சல்). 5. ப. குமாயூன் கபீர், வெளிப்பட்டணம். 6. இரா. நலங்கிள்ளி, அம்மையன்பட்டி, தஞ்சை மாவட்டம். 7. வி. சேவியர் ராஜ், குளச்சல் (அஞ்சல்). 8. எம். ஆனந்த், ஸ்ரீவில்லிபுத்தூர். 9. எஸ். சாரதா, உழவர்கரை, பாண்டிச்சேரி - 10. 10. மோ. சையத் அப்துல் காதர், தக்கோலம்.

சரியான விடை ; பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்.

கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

மணிகண்டன் மன்னன் மருதூரை ஆண்டு வந்தான். அரசவைக்கு வெளி யூர்ப் புலவர் ஒருவர் வந்தார்.

"மன்னா! நான் சகல நூல்களையும், கவி பாயிரங்களையும் கரைத்துக் குடித் தவன். பல நாட்டுப் புலவர்களையும் வென்று கேடயங்களையும் பரிசுகளையும் பெற்றுள்ளேன். நான் ஒரு கவிதை பாடு வேன். உமது அவைப் புலவரும் ஒரு கவிதையைப் பாடட்டும். அவர் கவி தைக்கு நான் பொருள் கூறுவேன். அதே போல் அவரும் என் கவிதைக்குப் பொருள் கூறவேண்டும். அவரால் என் கவிதைக்குப் பொருள் கூற இயலா விட்டால் 'நான்தான் சிறந்த புலவன்' என்ற பட்டயமும் ஆயிரம் பொற்காசு

கரைத்துக்

களும் தாங்கள் வழங்க வேண்டும்" என் றார் அகம்பாவப் புலவர்.

மன்னனின் அருகில் வந்த அவைப் புலவர் இரகசியமாக, "மன்னா, அவர் வைத்துள்ள கேடயங்களைப் பார்த்தால் மகாப் பெரிய புலவர் போல் இருக்கிறது. அவருடன் மோத எனக்குத் துணி வில்லை. என்னை மன்னிக்கவும்" என்று கூறி நழுவி விட்டார்.

மன்னன் மனத்தில் கவலை அதிகரித் தது. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், விகடகவி கோணங்கியார் எழுந்து வந்து, "மன்னா, புலவருடன் நான் போட்டியிடுகிறேன்" எனக் கூறினார்.

மன்னன் முகத்தில் கவலை குறைந்து நிம்மதி நிறைந்தது.

விகடகவி கோணங்கியார் புலவரைப் பார்த்து, "தாங்கள் 'இல் தெரி எற்கு புனை யவே யாப்பு' என்ற இலக்கண நூலைக் கற்றிருக்கிறீர்களா? அது தெரிந்தவருடன்



குடித்தவர்!

மட்டுமே நான் மோதுவேன்" என்றார்.

புலவர் முகத்தில் கர்வம் மறைந்து குழப்பம் படர்ந்தது. 'எத்தனையோ நூல்களைப் படித்திருக்கிறோம். ஆனால் இவர் கூறும் நூலைப் பற்றிக் கேட்டதோ, பார்த்ததோ கூடக் கிடையாதே! எல்லா நூல்களையும் கற்று விட்டதாக எண்ணியிருந்தோம்! இப்படி ஒரு நூல் இருப்பதை அறியவே இல்லையே?" என்று மனத்தில் திணறிப்போன அகம்பாவப் புலவர் மிகவும் சிரமப்பட்டுத் தன்னை சமாளித்துக் கொண்டார். "ஆ...! அந்த நூலைக் கூட நான் படித்திருக்கிறேனே?" என்றார்.

"அப்படி என்றால் நாம் நாளைக்கே மோதுவோம்" என்றார் விகடகவி.

மறுநாள் காலை அரசவையில் அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர். வெகு நேரமாகியும் அகம்பாவப் புலவரைக் காணவில்லை! அவரது வீட்டுக்கு ஆள் அனுப்பினர்.

போன ஆள் உடனே திரும்பி வந்து, "அரசே அவர் வீடே காலியாக இருக்கிறது! ஒரு பெட்டியும் கடிதமும்தான் இருந்தன" என்று தந்நார்.

மன்னர் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அகம்பாவப் புலவர்தான் எழுதியிருந்தார். "இந்தக் கேடயங்களையும், பொற்காசுகளையும் நமது விகடகவியாரிடம் வழங்குங்கள். நான் அவரிடம் தோற்று விட்டேன். அதனால் நாட்டை விட்டே செல்கிறேன். அவர் குறிப்பிட்ட இலக்கண நூலை நான் இதுவரை படித்ததில்லை. அவர் அதிமேதாவி; படிப்பாளி" என்று அகம்பாவப் புலவர் எழுதியிருந்தார்.


மன்னர் வியப்புடன் விகடகவியை நோக்கினார். "புலவர் கூட அறியாத நூலை நீங்கள் மட்டும் எப்படிக் கற்றீர்கள்?" என்று கேட்டார் மன்னர்.


"அரசே! அப்படி ஒரு நூல் இல்லவே இல்லை! 'இல்தெரி' என்பது 'தெரியில்' என்பதன் இலக்கண போலி. அதன் பொருள், 'தெரியாது' என்பதாகும். 'எற்கு' என்றால் 'எனக்கு' என்றும், 'புனையவே' என்றால் 'இயற்றவே' என்றும், 'யாப்பு' என்றால் 'கவிதை' என்றும் பொருள். அதாவது 'எனக்கு கவிதை இயற்றவே தெரியாது' என்று அர்த்தம்" என்று அமைதியாகக் கூறினார் விகடகவி.

"பல புலவர்களின் கவிதைகளுக்குப் பொருள் கூறிய புலவரால் இந்தச் சிறிய சொற்களுக்குப் பொருள் காண இயலவில்லையே! விகடகவியாரே தங்களால் நம் நாட்டின் பெருமை பிழைத்தது" என்று கூறிய மன்னன் பயந்து ஓடிப்போன அந்தப் புலவரை நினைத்து விழுந்து விழுந்து சிரித்தார்.

— இ. முகமது ஹாரூன் பாஷா,
வத்தலகுண்டு.

எறும்புகள் இரண்டும் எந்த வழியில் சந்திக்கும்?






தும்மினால் தண்டனை!

எஸ். சிந்துஜா

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் இரண்டாவது கதை

காட்டில் ஒரு முயல் இருந்தது. ஒருநாள் அது மிகவும் சந்தோஷமாகத் துள்ளித் துள்ளி ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தது. துள்ளித் துள்ளி ஆடியபோது அது தன்னையும் மீறித் தவறிப் போய் ஒரு பெரிய குழியில் விழுந்து விட்டது. விழுந்த பிறகுதான் தன் முட்டாள் தனம் அதற்குத் தெரிந்தது. குழிக்குள் இருந்து எப்படி வெளியே வருவது என்பது அதற்குத் தெரியவில்லை. "திருதிரு"வென்று விழித்த படி ஒன்றும் செய்யத் தோன்றாமல் தவித்து நின்றது. மேலே ஏறிவர என்ன வழி என்பதை வெகு நேரமாக யோசித்து யோசித்துப் பார்த்தது. ஒன்றும் பிரயோஜனம் இல்லை. அதற்கு "சுறுசுறு" வென்று கோபம் வந்தது. "மக்கு முட்டாள், மடையா, அடி மக்கு அடி முட்டாள், அடி மடையா" என்று தன்னைத் தானே சரமாரியாக அர்ச்சனை பண்ணிக்



கொள்ளத் தொடங்கியது! நிறுத்தவே இல்லை!

அப்போது அந்த வழியாக ஒரு கரடி வந்தது. குழிக்குள் சத்தம் கேட்டதைக் கேட்டு என்ன சத்தம் என்று எட்டிப் பார்த்தது. முயல் தனக்குத் தானே படபட வென்று பொரிந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் கரடிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"என்ன முயலாரே, குழிக்குள் தனியாக உட்கார்ந்துகொண்டு தவம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்னவோ ஜபம் வேறு செய்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்று கேட்டது வியப்புடன். முயல் அண்ணாந்து பார்த்தது. வெளியே வரத் தவித்துக் கொண்டிருந்த முயலுக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

"அதுவா கரடி அண்ணா? இன்று சித்ரா பௌர்ணமி இல்லையா? இன்று உலகமே அழியப் போகிறது. இந்தக் குழியில் இருப்பவர்கள் மட்டும்தான் தப்பிப் பிழைப்பார்கள் என்று என் பாட்டி சாவதற்கு முன் சொல்லிவிட்டுச் செத்துப் போனார். அது தான் காலையிலேயே இங்கு வந்து பத்திரமாக உட்கார்ந்து கொண்டேன். "ஹரி, ஹரி" என்று என் பாட்டி சொன்ன மாதிரி ஜபம் செய்து கொண்டிருக்கிறேன்" என்று கூறியது முயல்.


உடனே கரடி, "ஐயையோ அப்படியா? உலகம் இன்று அழியப் போகிறதா? அப்படியானால் நானும் குழிக்குள் வந்து விடுகிறேன்," என்று அவசரம் அவசரமாகக் கூறியது.

முயல் "ஐயையோ! வேண்டாம், வேண்டாம்! உனக்கு அடிக்கடி தும்மல் வரும். தும்மினால் இந்த இடம் அசுத்தமாகி விடும். பிறகு இங்கு இருப்பவர்களும் அழிந்து போவார்கள்" என்றது.

கரடி "இல்லை, இல்லை! நான் தும்மவே மாட்டேன். தும்மல் வந்தால் எப்பாடு பட்டாவது அடக்கிக் கொள்வேன்" என்று சொல்லிக் கொண்டே குழிக்குள் குதித்தது.

இரண்டும் குழிக்குள் இருந்தபடி "ஹரி, ஹரி" என்று ஜபம் செய்து கொண்டிருந்தன.

அப்போது அந்த வழியாக ஒரு புலி வந்தது. சத்தம் கேட்டு அது குழிக்குள் எட்டிப் பார்த்தது. "இரண்டு பேரும் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று



வியப்புடன் கேட்டது.

முயல் பதில் பேசவில்லை. கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்து கொண்டு இருந்தது. கரடிதான் பதில் கூறியது.

"இன்று உலகம் அழியப் போகிறதாம். இந்தக் குழியில் இருப்பவர்கள் மட்டும்தான் தப்பிப் பிழைப்பார்களாம். முயலோட பாட்டி சாவதற்கு முன் இந்த ரகசியத்தை சொல்லி விட்டுப் போயிருக்கிறார்களாம். அதுதான் இங்கே பத்திரமாக உட்கார்ந்திருக்கிறோம்" என்று கூறியது கரடி.

"அப்படியானால் நானும் உங்களோடு வந்து விடுகிறேன்'' என்று குழிக் குள் இறங்க முயன்றதுபுலி.

கரடி பதறியது "வேண்டாம், வேண் டாம். புலியாரே இந்த இடம் உங்களுக்கு சரிப்படாது. இங்கே யாரும் தும்மவே கூடாது. நீங்களோ ஆடு, மாடு எல்லாம் தின்பவர். தும்மல் வராமல் இருக்காது. இடத்தை மிகவும் அசுத்தமாக்கி விடுவீர்கள். இங்கே வரா தீர்கள்" என்று கெஞ்சியது.

"இல்லை, இல்லை! நான் தும்மவே மாட் டேன். கவனமாக இருக்கிறேன். இன்று காலையிலிருந்து நான் ஒன்றும் சாப்பிடக் கூட இல்லை,'' என்று சொன்னபடியே குழிக்குள் இறங்கியது புலி. மூன்றுமாகச் சேர்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தன.


சற்று நேரம் கழித்து ஒரு யானை அந்த வழியாக வந்தது. சத்தம் கேட்டு எட்டிப் பார்த்து விவரம் கேட்டது. புலி விவரம் சொல்லி "தும்மக்கூடாது" என்ற நிபந்தனை யையும் கூறியது. யானையும் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டு குழிக்குள் இறங்கியது.

கொஞ்ச நேரம் சென்றவுடன் முயல் கரடியைப் பார்த்து, "என்ன மூக்கை சுளிக் கிறாய்? தும்மல் வருகிறதா?" என்று கேட் டது. "இல்லை, இல்லை! சும்மா குறுகுறு வென்று இருந்ததால் வேகமாக மூச்சு விட் டுச் சமாளித்தேன்" என்ற கரடி புலியைப் பார்த்து, 'எங்கேயாவது தும்மி, கிம்மி விடாதீங்க புலியாரே!" என்று எச்சரித்தது. "இல்லை. இதோ பார். தும்மல் வராதபடி மூக்கை அடிக்கடி தேய்த்து விட்டுக் கொள் கிறேன்" என்றது புலியார். முயல் யானை யைப் பார்த்து "என்னவோ சத்தம் கேட் கிறதே யானையாரே?" என்றது.

யானை "இதோ பார். என் துதிக் கையை காலால் அழுத்தி மிதித்துக் கொண்டிருக் கிறேன். தும்மல் வர வழியே இல்லை" என் றது. முயல் திருப்தியுடன் தலையை ஆட்டி விட்டுத் தொடர்ந்து ஜபத்தில் மூழ்கியது.

மேலும் சிறிது நேரம் சென்றது. முயல் திடீரென்று முகத்தைக் கோணிக் கொண்டு ''ஐயோ! அம்மா! உங்களையெல்லாம் சொல்லிவிட்டு எனக்குத் தும்மல் வருகிறதே! அடக்க முடியாது போலிருக்கிறதே? ஐயோ" என்று தும்மலை அடக்கப் பார்த்துத் தவித் தது முயல். ''தும்மாதே தும்மாதே" என்று தடுக்கப் பார்த்தன மற்றவை. முயலால் முடிய வில்லை. "அச்! அச்!" என்று இரண்டு தும் மலைப் போட்டது முயல்.

யானை, புலி, கரடி மூன்றுக்கும் அடக்க முடியாத கோபம் வந்தது. "நீ தும்மி விட் டாய்! இந்த இடத்தை அசுத்தமாக்கி விட் டாய்! உன்னால் எங்களுக்கும் ஆபத்து." என்று கத்தியபடி முயலை புலியும் கரடியும் அழுக்கிக் கொண்டன. யானை தன் துதிக் கையால் அதைச் சுழற்றி குண்டு கட்டாக மேலே தூக்கிக் குழிக்கு வெளியே எறிந்தது. முயல், ''அப்பாடா! நல்லபடியாகக் குழிக்குள் ளிலிருந்து தப்பித்தேன்! என் தந்திரம் பலித் தது!" என்று சந்தோஷமாக ஓடியது.



"யாரோ! ஒரு ராஜா மகன் ஸ்கூலுக்குப் போறானாம்"
- நெற்குப்பை கி. மனோகரன்


யாருக்கு பாரதம்?

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி – 1

பொம்மை விற்பவள் : பொம்மை! பொம்மை! ஏ! தம்பி! தங்கைகளா! விதம் விதமான பொம்மைகள் கொண்டு வந்திருக்கேன். வந்து பாருங்க!

நீரஜா : பொம்மைக்காரம்மா, நில்லுங்க, நில்லுங்க, இதோ வந்துட்டேன்.



பல்தேவ் : இதோ நானும் வந்துட்டேன்; எனக்கும் பொம்மை வேணும்!

சிந்து : ஹை, பொம்மையா! இதோ நானும் கீழே இறங்கி வந்துக்கிட்டிருக்கேன். நான் வந்தப்புறம் கூடையை கீழே இறக்கி வை!

ஷ்யாம் : நானும் இதோ வந்தாச்சு! பொம்மைக்காரம்மா. இப்ப கூடையைக் கீழே இறக்கி வையுங்க.

பொ. விற்பவள் : எதுக்கு இப்படி எல்லாரும் மூச்சிறைக்கப் படிக்கட்டுலே வேகவேகமா இறங்கி வர்றீங்க? நான் எங்கே போயிடறேன்! உங்களுக்கு விற்கத்தானே கொண்டு வந்திருக்கேன்? ம்! இனிமே எல்லாரும் பொம்மைகளைப் பாருங்க.

நீரஜா : ஹை! இந்த 'காஷ்மீர் படகு வீடு ரொம்ப நல்லா இருக்கே!

பொ.விற்பவள்: நீயே காஷ்மீர்காரி! உனக்குப் படகு வீடு பிடிக்காதா என்ன? எடுத்துக்கறியா?

நீரஜா : ஆமாம் பொம்மைக்காரம்மா. இதை எதாலே பண்ணியிருக்காங்க?

பொ.விற்பவள்: வெறும் அட்டை தான்! விலையும் ரொம்ப மலிவுதான்.

நீரஜா : வெறும் அட்டையா? அப்போ கொஞ்ச நாளானா தூக்க படிஞ்சுடும்; கறையான் கூடப் பிடிச்சுடும். எனக்கு வேண்டாம்!

பல்தேவ் : ஹை! இந்த மலை ரொம்ப நல்லாயிருக்கே?

பொ.விற்பவள் : அத்தனையும் கிளிஞ்சலால் பண்ணினது தம்பி!

(பல்தேவ் கையிலிருந்த கிளிஞ்சல் மலை கை தவறிக் கீழே விழுந்து உடைகிறது)

பல்தேவ் : அச்சச்சோ! ஸாரி பொம்மைக்காரம்மா. கைதவறிடுத்து... இதோட விலையைக் கொடுத்துடறேன்.

பொ.விற்பவள் : பரவாயில்லை பல்தேவ் தம்பி! வருஷக்கணக்கா நீங்க எல்லாரும் இந்த 'ஃப்ளாட்'டுலே இருந்துக்கிட்டு வர்றீங்க... எங்கிட்டே எவ்வளவோ வியாபாரம் பண்ணியிருக்கிங்க... பரவாயில்லை... ஜாக்கிரதையா எட்ட நின்னு பாருங்க!

சிந்து : இதோ இந்த மண்டபம் கூட

அழகாயிருக்கு. ஆனா கண்ணாடியால பண்ணியிருக்கீங்க. கீழே விழுந்தா அவ்வளவுதான். இது எனக்கு வேண்டாம்!

ஷ்யாம் : இந்த சிங்கம் கூட பிரமாதமா இருக்கு. ஆனா பஞ்சுலே பண்ணியிருக்கீங்க! எப்படியும் அழுக்கு படிஞ்சு பாழாயிடும்!

பொ.விற்பவள் : அடேயப்பா, எல்லாருமே எப்படி இப்படிக் கெட்டிக்காரங்களா மாறிட்டீங்க? சரி! இந்தக் கூடையை திறந்து காட்டறேன்! இதுலே காகிதக் கூழ்ல செய்த பொம்மைகள் நிறைய இருக்கு! உடையவும் உடையாது. நசுங்கவும் நசுங்காது! பாக்கறீங்களா?

நால்வரும் : ஓ!

பொ.விற்பவள் : அப்போ எல்லாரும் அப்படித் தள்ளி உட்காருங்க! ஒவ்வொருத்தரா வந்து எந்த பொம்மை வேணும்னு சொல்லுங்க... எடுத்து 'பேக்' பண்ணித் தரேன்... மொதல்லே. நீரஜா, நீ வந்து பாரு!



நீரஜா : இதோ, தலையிலே பொன் 'கலர்'லே கூடைய போட்டுக்கிட்டிருக்கே, இந்த பொம்மை எனக்கு வேணும்!

பொ.விற்பவள் : சரி, உனக்கு பல்தேவ்?

பல்தேவ் : இதோ, நம்ம இந்தியா மாதிரியே அழகா செய்திருக்கிற இந்தப் பொம்மைதான் எனக்கு வேணும்!

பொ.விற்பவள் : அடேடே! அப்படியா? சரி, சிந்து உனக்கு?

சிந்து : இதோ, நம்ம நாட்டு மூவண்ணக் கொடியைக் கம்பீரமா கையில பிடிச்சிருக்கிற இந்தப் பொம்மைதான் எனக்கு வேணும்!

பொ.விற்பவள் : அம்மாடியோவ்! சரி, உனக்கு ஷ்யாம்?

ஷ்யாம் : இதோ 'பாரதம் 50'ன்னு ரோஜாப் பூவாலேயே எழுதியிருக்கற இந்தப் பொம்மைதான் எனக்கு வேணும்! என்ன விலை சொல்லு!

பொ.விற்பவள் : தம்பி, தங்கைகளா! நீங்க எல்லாரும் விரும்பிக் கேட்ட பொம்மை, இதோ இந்தப் பாரதமாதா பொம்மைதான். நம்ம பாரதம் சுதந்திரம் அடைஞ்சு ஐம்பது வருஷம் பூர்த்தியானதுக்காக, செய்யப்பட்ட சிறப்புப் பொம்மை இது! இதுக்கு ரொம்ப கிராக்கி! எனக்குக் கிடைச்ச பொம்மையும் ஒன்னே ஒன்னுதான். இந்த ஒரு பொம்மையை, உங்க எல்லாருக்கும் எப்படிக் கொடுப்பேன்?

நீரஜா : பொம்மைக்காரம்மா,



இந்தியாவிலேயே ரொம்ப அழகான இடம் காஷ்மீர்தான்! அந்த இடத்துலே பிறந்து வளர்ந்தவ நான்! அதனால எனக்குத்தான் நீ இந்த பொம்மையைத் தரணும்.

பல்தேவ் : நான் மட்டும் இலேசு இல்லே பொம்மைக்காரம்மா. வீரர்கள் நிறைஞ்ச பாஞ்சால தேசத்தவங்க; பஞ்சாப்காரங்க நாங்க! அதனால இந்த பொம்மையை எனக்குத்தான் தரணும்!

சிந்து : நான் அரச பரம்பரையைச் சேர்ந்தவள்! எங்க பாட்டனாருக்குப் பாட்டனார் ராஜஸ்தான் மன்னராக இருந்தவர்.

ஷ்யாம் : எங்கள் பரம்பரை தேசபக்தி நிறைந்த பரம்பரை! சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று பலமுறை சிறை சென்ற பரம்பரை! அதனால் இந்தப் பாரதமாதா பொம்மையை நீ எனக்குத்தான் தரவேண்டும்!

நீரஜா : இல்லை எனக்குத்தான்!

பல்தேவ் : இல்லை எனக்கே தான்!

சிந்து : முடியாது!

ஷ்யாம் : விடமாட்டேன்! பொம்மை எனக்குத்தான்!

பொ.விற்பவள் : தம்பி தங்கைகளா, நிறுத்துங்க உங்க கூச்சலை! இந்த பொம்மையை நீங்க நாலு பேருமா சேர்ந்து வச்சுக்கிட்டு ஒற்றுமையா விளையாடுங்க! ஆளுக்கு இருபது ரூபாதான் தரும்படியா இருக்கும்!

நால்வரும் : அது முடியாது!

பல்தேவ் : இது எனக்கே சொந்தமாக இருக்க வேண்டும்!

பொ.விற்பவள் : ம்! அப்படியானால் ஒன்று செய்கிறீர்களா?

நால்வரும் : என்ன செய்ய வேண்டும்?

பொ. விற்பவள் : என் வீட்டுத் தோட்டத்திலே ஒரு புதையல் இருக்கு. அந்தப் புதையலுக்கு மேலே ஒரு கனமான இரும்பு மூடி இருக்குது. உங்க நாலு பேர்ல யார் அந்த மூடியை அசைச்சு நகர்த்தித் திறந்து கொடுக்கறீங்களோ, அவங்களுக்கு இந்த பாரதமாதா பொம்மையைத் தந்திடறேன். போட்டிக்குத் தயாரா?

நால்வரும் : ஓ! தயார்!

பொ.விற்பவள் : சரி, மகிழ்ச்சி! நாளைக் காலை சரியாக எட்டு மணிக்கு என் வீட்டிற்கு வந்து விடுங்கள்! வருகிறேன். பொம்மை! பொம்மை!

காட்சி – 2

பொ.விற்பவள் : வாருங்கள் தம்பி தங்கைகளே! இதோ இதுதான் நான் சொன்ன புதையல் மூடி! கனமான இரும்பு மூடி. கையால் அசைக்கக் கூட

முடியாது. இந்தாருங்கள். ஆளுக்கொரு கொம்பு! இதன் உதவியால் நெம்பி நகர்த்தித் திறக்க முயலுங்கள் பார்க்கலாம்?

பல்தேவ் : முதலில் நான்தான் முயற்சிப்பேன்.. ம்.. ம்.. ம்ம் அடேடே! முடியவில்லையே, கொம்பும் உடைந்து விட்டதே!

(தொடர்ந்து நீரஜா, ஷ்யாம், சிந்து தனித்தனியே முயற்சி செய்ய அவர்களது கொம்புகளும் உடைய, சோர்வுடன் உட்கார்ந்து விடுகிறார்கள்.)

பொ.விற்பவள் : என்ன சோர்ந்து போய் உட்கார்ந்துட்டீங்க? இன்னொரு கொம்பு வேணுமா தரேன். முயற்சி செய்து பாருங்கள்!

நால்வரும் : வேண்டாம். எங்களால் முடியாது.

பொ.விற்பவள்: நம்பிக்கை இழக்கக் கூடாது குழந்தைகளே! சற்று முன்பு நீங்கள் தனித்தனியாக முயன்று மூடியை அசைத்துப் பார்த்தீங்க. முடியலே! கொம்பும் உடைஞ்சு போச்சு. ஒன்றாகக் கோல்களை வைத்து, ஒரே சமயத்தில் நெம்பி இருந்தால், மூடி ஒருவேளை அசைந்திருக்கலாம்; இல்லையா?

நீரஜா : நீங்கள் சொல்வதும் சரிதான் பொம்மைக்காரம்மா! இப்பொழுது கொம்புகளைக் கொடுங்கள்! ஒன்றாக நின்று ஒரே சமயத்தில் மூடியை நெம்பி அசைக்க முயல்கிறோம்!

நால்வரும் : ஒரே சமயத்தில் எல்லோருமே ஒன்றாக மூடியை நெம்புவோம்!

பல்தேவ் : ஒன்...டு..த்ரீ!

ஷ்யாம் : சபாஷ் மூடி சுலபமாக நகர்ந்து விட்டது!

சிந்து : ஆனால் புதையல் எதையும் காணோமே!

நீரஜா : ஏதோ மடிக்கப்பட்ட பெரிய தடித்த காகிதம் இருக்கு! இதில் 'நான்தான் அந்தப் புதையல்' என்று கூட இதோ எழுதியிருக்கு சிந்து!

ஷ்யாம் : பின்னால் மூவண்ணக் கொடியின் உருவம்!

சிந்து : ஆமாம்! நன்றாகப் பிரி! உள்ளே இன்னமும் நிறைய எழுதியிருக்கிறது.

பொ.விற்பவள் : எல்லோருமாகப் படியுங்கள்! நானும் கேட்கிறேன்.

நால்வரும் : ஒன்றுபட்டு வாழ்வதால், உயர்வாய் பாரதம் விளங்கிடுமே! பிளவுபட்டு நிற்பதால், பின்வரும் நூறு இன்னல்களுமே!

பொ.விற்பவள் : என்ன குழந்தைகளா புரிந்ததா?

பல்தேவ் : பொம்மைக்காரம்மா! எங்களுக்கு எல்லாம் புரிந்துவிட்டது!

ஷ்யாம் : ஆமாம்! ஒன்றாய் எண்ணி, ஒன்றாய்ச் செய்தால் எல்லாம் எளிதாகும்!

நீரஜா : ஒற்றுமையின் பெருமையையும், வலிமையையும் உணர்ந்து கொண்டு விட்டோம் பொம்மைக்காரம்மா!

பொ.விற்பவள் : ஒற்றுமையின் பெருமையை நீங்களாகவே உணர்ந்து கொள்ளணும்னுதான், இந்த நாடகத்தை நடத்தினேன்! இப்போ எல்லாருமா கையை நீட்டுங்க! இந்தாங்க நீங்க கேட்ட பாரதமாதா பொம்மை! நாலு பேருமா இந்தப் பொம்மையை வச்சுக்கிட்டு ஒத்துமையா விளையாடுங்க! இந்தப் பொம்மைக்கு நல்லா அலங்காரம் பண்ணுங்க! முன்னால கோலம் போடுங்க! தேசபக்திப் பாடல்களைப் பாடி, ஆடி சந்தோஷப்படுங்க! பெரியவங்களைக் கூட்டிக்கிட்டு வந்து, அவங்க மூலமா நம்ம நாடு சுதந்திரம் அடைஞ்ச வரலாறைக் கூட்டமா உட்கார்ந்து கேளுங்க! ஒவ்வொரு சுதந்திரத் தினத்தையும் பயபக்தியோடு கொண்டாடுங்க! ஒருவருக்கொருவர் ஒற்றுமையா விட்டுக் கொடுத்து வாழக் கத்துக்குங்க. செய்வீங்களா?

நால்வரும் : நிச்சயம் செய்வோம்!

பொ.விற்பவள் : அப்போ சொல்லுங்க "வந்தே மாதரம்!"

நால்வரும் : வந்தே மாதரம்! வந்தே மாதரம்!



"டிரான்சிஸ்டருக்கு எதிர்பதம் என்னடா?"

"டிரான்ஸ்பிரதர்."

— பா. ஜெயக்குமார்

எங்கள் ஊரில் நடந்தது!


கடன் வாங்கக் கூடாது!

வகுப்பில் கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவனி டம் கழித்தல் கணக்கைக் கொடுத்து விடை எழுதச் சொன்னார். அவன் தப்பா கப் போட்டான். "ஏண்டா தப்புப் பண்ணி யிருக்கே? இரண்டில் மூன்று போக லைன்னா பக்கத்துல கடன் வாங்கணும்னு



சொன்னேனே? நினைவிருக்கா?" என்று கேட்டார். "எங்கப்பா யாரிடமும் கடனே வாங்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கிறார் சார்" என்றான் அவன்!

மதுரை, செ. மலர்விழி.



பகிர்ந்து அளித்தேன்

வகுப்பில் நன்றாகப் படிக்கும் மாண வன் ஒருவன், படிப்பில் வீக்காக இருக்கும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து உதவுவான். அவனே ஒருமுறை ஏதோ காரணத்தினால் ஒரு பாடத்தில் பெயில் ஆகி விட்டான். இவ்வளவுக்கும் அவன் மிக நன்றாகப் படிக்கக்கூடியவன். இது ஆசிரியருக்கும் தெரியும். அவர் அவனை அழைத்து, "ஏண்டா நீயே பெயில் ஆனாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "என் மதிப்பெண்களை எல்லாம் மற்ற மாணவர்களுக்குப் பகிர்ந்து அளித்து விட்டேன் சார்!" என்றான்.

நெல்லை, தி.சு. வெங்கடசுப்பிரமணியன்.

எங்கே இருக்கு?

எங்கள் சமூக ஆசிரியர் மிகவும்






கண்டிப்பானவர். அன்று பூகோளப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பாடத் தைக் கவனிக்காமல் இருந்த மாணவனைப் பார்த்து, "இந்த மேப்பில் கல்கத்தா எங்கே?ன்னு காட்டு" என்று கேட்டார். உடனே அவன், கொஞ்சம் கூடப் பதட்ட மில்லாது "இந்தியாவிற்குள்தான்" என் றான். ஆசிரியரே சிரித்து விட்டார்!

பூதலூர், எஸ். சிவக்குமார்.

வேலி போட்டு அடைக்கணும்...

எங்கள் அறிவியல் ஆசிரியர், "கதிரி யக்கக் கழிவுகளைக் கட்டுப்படுத்துவது எப்படி?" என்று பாடம் நடத்தினார். சக மாணவன் ஒருவன் பாடத்தைக் கவனிக் காது வேடிக்கை பார்த்ததை ஆசிரியர் கவனித்து விட்டார். உடனே அவனை எழுப்பி, கதிரியக்கக் கழிவுகளைக் கட்டுப் படுத்தும் வழி ஒன்றைக் கூறச் சொன் னார். தடுமாறிய அவன், "கதிரியக்கக் கழிவுகளை அடைத்துக் கடலில் போட வேண்டும்" என்றான். "எதில் அடைக்க வேண்டும்?"




என்று ஆசிரியர் கேட்டார். அதற்கு, "வேலி போட்டு அடைக்க வேண்டும்" என்றானே பார்க்கலாம் அவன்!

சிதம்பரம், கி. சடைச்சாமி.

இரண்டா?

நானும் தம்பியும் சென்னை செல் லும் பேருந்தில் பயணம் செய்து கொண் டிருந்தோம். கண்டக்டர் அருகில் வந்து, "எங்கே போகணும்?" என்று கேட்டார்.



நான் "சென்னை இரண்டு கொடுங்க," என்றேன். அருகில் இருந்த தம்பி, "அண்ணா சென்னை ஒன்றுதானே உள் ளது? நீ ஏன் இரண்டு கேட்கிறே?" என்று கேட்டான் புரியாமல்.

வரிக்கல், பெ. ரமேஷ்.

இறங்கவா?

எங்கள் ஊர் ஆட்டையாம்பட்டியி லிருந்து சேலம் நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். பல இடங்களைக் கடந்து பஸ் நெத்திமேடு ஸ்டாப்பிங்கில் நின்றது. உடனே கண்டக்டர், "நெத்தி மேடு எல்லாம் இறங்குங்க," என்று சொன் னார். பயணிகள் வேகமாக இறங்கினர். என் குறும்புக்கார நண்பன் கண்டக்டரி டம் சென்று, "சார், எனக்கும் நெத்தி மேடா இருக்கு. நானும் இறங்கட்டுமா?" என்று




கேட்டான். பஸ்ஸில் இருந்த அனைவரும் கொல்லென்று சிரித்தனர்!

ஆட்டையாம்பட்டி, பி. விஜயகுமார்.

விக்கிர வண்டி

நானும் நண்பனும் பாண்டி செல்வதற்காக விழுப்புரம் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால், விக்கிர வண்டி செல்லும் பஸ் வந்து நின்றது. பஸ்ஸின் முன்புறம் "விக்கிர வண்டி" எனப் பலகையில் எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்ட நண்பன் ஓட்டுனரிடம் சென்று "இந்த பஸ்ஸின் சொந்தக்காரர் யாருங்க?" என்று கேட்டான். அவர், "ஏன்?" என்று கேட்க, "இந்த வண்

டியை வாங்கத்தான்! பஸ்ஸின் பெயர்ப் பலகையில் விக்கிர வண்டின்னு போட்டிருக்கே?" என்று பலகையைக் காண்பித்




தான். அது ஊரின் பெயர் என்று தெளிவு படுத்திய பின் ஓட்டுநர் எல்லோருடனும் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்.

வரிக்கல், எம். ராஜதுரை.

மாடு பத்திரம்

பக்கத்து வீட்டுக்காரர் தன் மகனிடம், தான் ஊருக்குச் செல்வதாகவும், அதனால் "மாடு பத்திரம்" என்றும் கூறினார். உடனே மகன், "நான் இதுவரைக்கும் நிலப்பத்திரம்தான் கேள்விப்பட்டிருக்




கிறேன். மாடு பத்திரம் என்ற பத்திரத்தைக் கேள்விப்படவில்லையே!" என்றானே பார்க்கலாம்!

துத்திப்பட்டு, ச. சுதாகர்.

கிரிஸ்டல் கொண்டா!

அரையாண்டு விடுமுறைக்கு பெரியம்மா வீட்டிற்குச் சென்றேன். பெரியம்மாவிற்கு ஏழு வயதில் கரண் என்ற பையன் இருந்தான். அனைவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். கரண் மட்டும் சாப்பிடப் போனான். சிறிது நேரத்தில் "அம்மா கிரிஸ்டல் பத்தவில்லை. கொஞ்சம் எடுத்து வாருங்கள்" என்றான். எனக்கும் பெரியம்மாவிற்கும் ஒன்றும் புரியவில்லை. நான் அவனிடம் "நீயே போய்




கிரிஸ்டலை எடுத்து வா" என்றேன். அவனும் ஒரு டப்பாவை எடுத்து வந்து காண்பித்தான். அப்போதுதான் கிரிஸ்டல் என்று அவன் கூறியது உப்பு என்பது புரிந்தது!

குருசாமிபாளையம், ச. செல்வராஜ்.

தண்ணீரைத் தொலைத்து விட்டான்!

மூன்றாம் வகுப்புப் படிக்கும் கட்டிப் பயல் தினமும் பென்சில், புத்தகம் என்று எதையாவது தொலைத்து விட்டு வருவான். தினந்தோறும் தொலைப்பதும் அவன் அழுது கொண்டே வருவதும் வாடிக்கையாகி விட்டது.

ஒருநாள் அதிசயமாக தான் எடுத்துச் சென்ற எல்லாப் பொருள்களையும் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தான். எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. இதைக் கவனித்த தம்பி. "அப்பா அண்



ணன் இன்னிக்கும் ஒரு பொருளைத் தொலைச்சிட்டு வந்திருக்கு. தண்ணீரைத் தொலைத்து விட்டான்" என்று தண்ணீர் பாட்டிலைக் கவிழ்த்துக் காண்பித்தான்.

பாலவிடுதி, கே. மணியரசு.

துண்டாக

ஒரு நாள் நானும் நண்பனும் சுற்றுலா




செல்வது குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது "வேளாங்கண்ணி சென்று வர எவ்வளவு செலவாகும்?" என்று கேட்டேன் நான். நண்பர், "துண்டாக இருநூறு ரூபாய் செலவாகும்" என்றான். உடனே அருகில் இருந்த என் தம்பி, "ஏன், வேட்டியாக இருந்தால் ஆகாதா?" என்று கேட்டான்.

சோழன்மாளிகை, எல். இராமச்சந்திரன்.

சாமி போட்ட உப்பு

ஹரிகணேஷ் எல்.கே.ஜி. படிக்கிறான். என்னிடம் ரொம்பப் பிரியமாக இருப்பான். அதனால் எங்கு சென்றாலும் அவனை அழைத்துச் செல்வேன். சென்ற



மாதம் பூம்புகார் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். கடல் அலையில் விளையாடும்போது தண்ணீரை வாயில் வைத்து விட்டான். உடனே கீழே துப்பி விட்டு, "ஐயய்ய! என்ன தண்ணீர் இப்படி உப்பா இருக்கிறது?" என்று கேட்டான் முகத்தைக் கோணிக் கொண்டு. என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. அதனால், "சாமி நிறைய உப்பைப் போட்டு விட்டார்" என்று சொல்லி வைத்தேன். அவனும் "சரி" என்று அதை ஏற்றுக் கொண்டான். இதற்குப் பிறகு வீட்டில் ஒரு நாள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். குழம்பில் உப்பு அதிகமாக இருந்தது. அதைச் சாப்பிட்ட ஹரி கணேஷ், "சாமி நிறைய உப்பைப் போட்டு விட்டார் போலிருக்கு! சாமியிடம் உப்பைக் கொஞ்சம் குறைக்கச் சொல்கிறேன்!" என்று பூஜை அறையை நோக்கி நடந்தான். அனைவரும் அதிசயித்து நின்று விட்டோம்.

மேலப்பாதி, என். ராஜலெட்சுமி.

பல்லைக் கடித்தேன்!

ஊரிலிருந்து தாத்தா வந்திருந்தார். பேசிக் கொண்டிருந்தபோது, "மூன்று மாதம் மாமா வீட்டில்தான் தங்கியிருந்தேன்" என்றார். அதற்கு அம்மா, "அங்கு [illegible] தங்களுக்கேற்ற வசதியிருக்கா?



எப்படி அவ்வளவு நாள் தங்கியிருந்தீங்க?" என்று கேட்டார். உடனே தாத்தா, "எப்படியோ பல்லைக் கடிச்சிட்டுக் காலத்தை ஓட்டினேன்" என்றார். அருகில் இருந்த என் தம்பி, "உங்களுக்குப் பல்லே இல்லையே தாத்தா! எப்படிக் கடிச்சிட்டிருந்தீங்க?" என்று கேட்டான். "பொக்கை வாயுடன்தான்டா" என்றார் தாத்தா பெருமையுடன்!

மன்னார்குடி. க. வாதன்.



குழம்பு இனிக்குமா?

காலையிலிருந்து தொடர்ந்து விளையாடி விட்டு மதியச் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வந்தேன். அம்மா வேலையாக இருந்தாள். மறுபடி விளையாடப் போகும் அவசரத்தில் படு வேகமாகச் செயல்பட்டேன். ஒரு உருண்டை சாதத்தை வாயில் போட்டதும் எப்படியோ இருந்தது! "என்னம்மா குழம்பு இனிக்குது!" என்று கத்தினேன். அருகில் வந்த அம்மா சாப்பிடப் போகும் அவசரத்தில் குழம்புக்குப் பதில் கூழை ஊத்திக்கிட்டே! இனிக்காம எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

அதிராம்பட்டினம், எஸ். முகம்மதுசரீஃப்

விடுதலைப் போராட்ட வீரர்களிடம் என்ன ஒற்றுமை?

— போட்டி



பால கங்காதர திலகர்




வ.வெ.சு. ஐயர்



வ.உ. சிதம்பரனார்



ராஜாஜி



பாபு ராஜேந்திர பிரசாத்



ஜவாஹர்லால் நேரு



காந்தியடிகள்

வல்லபாய் பட்டேல்



மோதிலால் நேரு



விடுதலைப் போராட்ட வீரர்களிடம் என்ன ஒற்றுமை? - போட்டி

இந்த ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள், நம் நாடு விடுதலையடைந்த பொன்விழா ஆண்டு. இந்த மாதப் போட்டியும் விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூறுவதாக அமைவதுதானே பொருத்தமாக இருக்கும்? இங்கேயுள்ள படங்களைப் பாருங்கள். பால கங்காதர திலர், மோதிலால் நேரு, காந்தியடிகள், வல்லபாய் பட்டேல், ஜவாஹர்லால் நேரு, பாபு ராஜேந்திர பிரசாத், வ.உ. சிதம்பரனார், வ.வெ.சு. ஐயர், ராஜாஜி ஆகியோர் இதில் இருக்கிறார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இவர்களது பங்கு எத்தகையது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இவர்களுக் குள் ஓர் ஒற்றுமை உண்டு. இவர்கள் அனைவருமே சுதந்தரப் போராட்ட வீரர்கள் என்பதுதானே என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. இதையும் தவிர, இன்னொரு ஒற்றுமையும் இவர்களுக்குள் உள்ளது. இது என்ன என்பதைக் கண்டு பிடித்து எழுத வேண்டும். மிக முக்கியமான ஓர் ஒற்றுமை இவர்களுக் குள் இருக்கிறது. இவர்களது வாழ்க்கை வர லாற்றைக் கொஞ்சம் புரட்டித்தான் பாருங்களேன். இந்த சாக்கிலாவது இவர்களைப் பற்றி அறிந்து கொள்ளலாமே? முகவரிக் கூப்பனை எழுதி அனுப்புவதோடு, உங்கள் முகவரியையும் தர வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முடிவு தேதி : 31.8.97

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

கோடை விடுமுறைப் போட்டி - 11

சரியான விடை கீழே தரப்பட்டுள்ளது. பரிசு பெற்றோர் விபரம் இன்னொரு பக்கம் வெளியாகியுள்ளது.

		23 க		24 க				1 25 பு	ர	26 வி			
	2 க	ர	க	ம்			3 எ 27	லி		ல்		4 பூ 28	னை
		ப்		ம			ம					ட்	
5 சீ	ப்	பு		ல்	29 தா	6 மா	ன்		க 30			டு	
	ஆ 31		32 க		7 ம	கு	டி	8 ந 33	ண்	டு	9 கு 34	தி	ரை
10 ஏ	ணி		ட்		ரை			தி			ரு		
			டி		11 ஓ 35	ட	ம்		12 அ	ரு	வி		
	13 க 36	ட	ல்		ணா		14 மு	ரு	37 க	ன்		15 ம 38	ணி
	ர			16 தெ	ன்	னை			ழு			யி	
	டி		39 ந					40 ச	தை	41 ப		ல்	
		17 அ	ரி	42 வா	ள்		18 சி	ங்	க	ம்			
19 ரோ	43 ஜா			ன				கு		ப		20 சா 44	வி
	டி		21 க	ர	ம்					ர		ட்	
				ம்			22 ப	ட்	ட	ம்		டை	




''இறைவனிடம் கேட்கக் கூடாத வரம் எது?''
கல''வரம்.''

– சு. மதிவாணன்

பரிசுக்காக...

கதை, அமைப்பு : ரே ஓவியம் : சசி




உனக்காக எதுவும் செய்வேன். கிணத்துல தவறி விழுந்த என் குழந்தையைக் காப்பாற்றியவனாச்சே நீ?
நன்றி சார்!
இரண்டு மாதமானதும் –
அருள், உன் நாய் பூரண குணமாயிடிச்சு.
இதை மறக்கவே மாட்டேன் டாக்டர்.
சிகிச்சை கால் பங்குதான். மீதி உன் அக்கறை தான். ஆமாம், இதுக்கு என்ன பெயர்?
டைகர். பொருத்தமா இருக்குமா டாக்டர்?
ரொம்பப் பொருத்தம். பேச வராதே தவிர, புரிஞ்சுக்கும். அத்தனை புத்திசாலி இனம்.
ஆமாம். சர்க்கஸ் வேலை, துப்பறியும் வேலை கூடக் கற்றுத் தரலாம்.
அப்படியா!
கண்டிப்பா முயற்சி பண்ணுவேன் டாக்டர்.


டைகரைக் கண்ணும் கருத்துமாக அருள் வளர்த்தான்.
பழக்கினான் –
குட்டிக் கரணம் போடு!
தீ வளையத்துல பாஞ்சுவா!
பாலு, நம்பி, பவானி இங்கே வாங்க. விளையாட்டுக் காட்டறேன்.
எல்லோரும் வந்ததும் –
உங்க கைகுட்டையை டைகரிடம் வரிசையா நீட்டுங்க.


எல்லோரும் நீட்டினர்
முகர்ந்து பார்த்தது
இனிமே எல்லாத்தையும் ஒரே இடத்துல போடுங்க.
போட்ட பிறகு –
டைகர், கைகுட்டையை அவங்கவங்க கிட்டே கண்டு பிடிச்சுக் கொடு...!
டைகர் கைகுட்டை களைப் புரட்டியது.
கட்டம் போட்ட கைகுட்டையை எடுத்தது.
பாலுவிடம் கொடுத்தது!
ஆமாம். என் கைகுட்டையேதான்!


மறுபடி புரட்டி பூப்போட்ட கைகுட்டையைக் கௌவி வந்து பவானியிடம் தந்தது.
ஆமா! என்னுதேதான்!
கோடு போட்டதைக் கௌவி வந்து நம்பியிடம் தந்தது!
என்னுதேதான்!
ரொம்ப நல்லா பழக்கியிருக்கே அருள்!
உண்மையாகவே அதிசய நாய்தான் டைகர்!
ஆச்சர்யமாயிருக்கு
செய்தி பள்ளியில பரவ –
அருள் டைகரைப் பார்க்க வரட்டுமா?
நானும்!
நான் கூட அருள்!
நானும் வரேன் அருள்
தாராளமாக எத்தனை பேர் வேணுமானாலும் வாங்க.




வந்த நண்பர்கள்
உண்மையாகவே டைகர் அதிசய நாய்தான்!
அதில் சந்தேகமே இல்லை!
எங்கம்மா லயனஸ் கிளப் தலைவர். நாய்க் கண் காட்சில டைகரையும் கலந்துக்க வைக்கலாம்.
வசதியானவங்க நாய்களெல்லாம் கலந்துக்கும். அதுல டைகர் கலந்துக்க முடியுமா?
சுறுசுறுப்பா, புத்திசாலித்தனமா, ஆரோக்கியமா, தனித் திறமைகளோடும் இருக்கான்னு பார்ப்பாங்க. டைகர் கண்டிப்பா பரிசு வாங்கும்.
உங்க நம்பிக்கையை நான் கெடுக்கலே!
கண்காட்சியில் டைகர் கலந்து கொண்டது.



முதல் பரிசு பெற்றது! அமைச்சர் பதக்கத்தை வழங்கினார்.
அருளின் நண்பர்கள் —
வாழ்த்துகள் டைகர்.
அருள் உனக்கும்தான்.
டைகரை மிஞ்ச நாய் இல்லை!
டைகரும், அருளும் பத்திரிகைகளில் இடம் பிடித்தனர்.
தொலைக்காட்சியில் —
டைகருக்கு என்ன உணவு தருவே?
என் சாதம்தான்! எப்பவாவது ரொட்டி!
எங்கப்பா தபால்காரர். பால், முட்டைக்கு எங்க போவேன்?
சங்கர் கோபத்துடன் —
சாதாரண தபால்காரர் மகனின் தெரு நாய், பெரிய வீட்டு நாய்களை வென்று பதக்கம் வாங்கி விட்டதே!


இதை இப்படியே விடக்கூடாது!
அமெரிக்க மாமாதான் பேசறேன். காலையில் கூப்பிட்டாயாமே சங்கர்?
உயர்ந்த வகை நாய் ஒன்னு வேணும். வளர்க்கப் போறேன்.
அனுப்பறது பிரச்னை இல்லை. உன்னாலே வளர்க்க முடியுமா?
என்னால முடியலேன்னா, ஆளைப் போட்டு வளர்க்கறேன்.
அப்படின்னா சரி. உடனே அனுப்பறேன்.
அமெரிக்காவில் இருந்து நாய் வந்தது! ஏக வரவேற்பு.
பணியாளர்களிடம் –
என்ன பண்ணுவியோ தெரியாது. இந்த நாய் முதல் பரிசு வாங்கனும்.


பள்ளியில் –
சங்கர், உங்க வீட்டுக்கு நாய் வந்திருக்காமே!
ஆமாம்! அமெரிக்காவில் இருந்து. விலை இருபதாயிரம் ரூபாய்!
அப்போ ரொம்ப உயர்ந்த இனம்! நீயே வளர்க்கப் போறியா?
நானே ஏன் வளர்க்கனும்? ஒரு ஆள் போட்டாச்சு!
பாக்க வரட்டுமா? என்ன பெயர்?
டாலர்! ரொம்ப உயர்ந்த ஜாதி! கண்டவங்களைப் பார்க்க அனுமதிக் காதேன்னு மாமா எச்சரித்திருக்கார்!
அந்த ஆண்டும் நாய்க் கண்காட்சி நடைபெற்றது.
இம்முறையும் அறிவு, துணிவு, வீர சாகசம் நிறைந்த டைகரே தங்கப் பதக்கம் பெறுகிறது!




ஆத்திரம் தாங்காத சங்கர் டாலரை அடித்தான்.
பரிசு வாங்காத டாலர் வேண்டாம். உடனே திருப்பி அனுப்புங்க!
இதுக்கு செலவானதுல நாய்ப் பண்ணை வைச்சிருக்கலாம்!
ஒரு வாரம் பொறுத்து –
தம்பி, அருள் தம்பி வந்திருக்கு. அனுப்பட்டுமா?
எதுக்கு அருள் வரான்? புரியலையே!
சரி, அனுப்பிவை.
அருள் வந்ததும் –
தங்கப் பதக்க டைகருக்கு சொந்தக்காரரே... வாங்க.. எங்கே இப்படி!



சங்கர், ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்.
என்னடா இது! பெரிய வி.ஐ.பிக்களின் நாய்களை மண்ணைக் கௌவ வச்சு தங்கப் பதக்கம் பெற வைத்த அருளுக்கு, என் உதவி தேவைப்படுதா!
கேலிக்கு நேரமா இது?
சரி சொல்லு அருள்?
வேப்பமரக் காலனி வீடுகள் உங்கப்பாவுதுதானே?
ஆமாம். அதுல கூட ஒரு வீடு காலியாகப் போகிறது... அதுக்கு என்ன?
அது எப்படியாவது எங்களுக்குக் கிடைக்கணும் சொந்தக்காரர் வீட்டை விற்றுவிட்டார். வாங்கியவர் காலி பண்ணக் கட்டாயப் படுத்தறார்.
அப்படியா!
யோசித்து –
பதிலுக்கு எனக்கு ஒரு உதவி பண்ணணும்?
என் உதவியா! கண்டிப்பா பண்றேன். சொல்லு?



டைகரை, வரும் ஆண்டு போட்டில கலந்துக்க வைக்க மாட்டேன்னு சத்தியம் செய்யணும்?
இதுல உனக்கு என்ன இலாபம்? டாலரைத் திருப்பி அனுப்பி விட்டாயே?
டாலர் போனா என்ன? பென்னியை வரவழைக்கிறேன். அது தங்கப்பதக்கம் வாங்கணும். நாங்க தங்கப் பதக்கம் வாங்கி டீ.வி. சினிமா எல்லாத்துலேயும் வரணும்.
இதோ சத்தியம்! சரிதானே சங்கர்?
நாட்கள் ஓடின
அருள், போட்டி அறிவிப்பு வெளியாகியிருக்கே!
டைகரைத் தயார் பண்ணலே?
டைகர் இந்தப் போட்டில கலந்துக்காது. சத்தியம் செய் திருக்கேன்.
அப்போ தங்கப் பதக்கம்?
புது நாய் பென்னி வந்திருக்கே... அதுக்குக் கிடைக்கத் தான்!


அடுத்த வாரம் –
சங்கர், போட்டி நாள் நெருங்கிடுத்தே? எங்கே பென்னி?
செங்கல் விழுந்து வாலில் காயம். படுத்திருக்கு!
அதைக் கவனிக்கிறவர் எங்கே? உடனே சிகிச்சை தரணுமே? இதுவே ஒரு மைனஸ் பாயிண்ட் ஆச்சே!
அவரு பையனுக்கு காய்ச்சலாம். நேற்று போனார். நாளை வந்துடுவார். பென்னிக்கு இப்பத்தான் விபத்து!
இன்னிக்கி பந்த் ஆச்சே? கார், பஸ், ஆட்டோ, எதுவும் இல்லை. கால்நடை மருத்துவரைப் பார்க்க ஐந்து கிலோ மீட்டர் போகணுமே?
என் நோக்கம் டைகர் பதக்கம் வாங்கக் கூடாது. அப்புறம்தான் பென்னி பரிசு வாங்குவது...
சைக்கிள் இருக்கு இல்லே? அதைக் கொடு.


பென்னியை பெரிய கூடையில் வைத்து கேரியரில் கட்டி சிகிச்சைக்குக் கொண்டு போனான்.
பென்னி போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றது.
சங்கர் வீட்டில் –
பரிசுக்கு பாராட்டுகள் சங்கர்.
நான் கூட ஒரு பரிசு தரப் போறேன் சங்கர்.
யாருக்கு அப்பா!
கோவில்லேருந்து நேற்று அம்மாவோட சங்கிலியை திருடன் அறுத்துட்டு ஓடிட்டான்.
அப்படியா! எனக்குத் தெரியாதே!
போராடி திருடனைப் பிடித்த ஒரு வீரனுக்கு இப்போ பரிசு! அரசாங்கம் வேறு பரிசு தரப் போறதாம்!


அவசியம் தரணும்! பாராட்டறது நம்ம கடமைதானே! யாரு அந்த வீரன்!
இதோ அருளோடு வரான் பார்!
காயம் பட்ட டைகரோடு அருள் வந்தான்.
டைகரா!
ஆம் சங்கர். திருடனைப் பிடித்த வீரன் டைகரேதான்!
அதைப் பரிசு வாங்காம தடுத்தே. ஆனா, நானே பரிசு தர வைச்சிடுத்து! அதோடு அரசாங்கப் பரிசு வேறு!
பரிசுக்குன்னே வளர்த்தே! பேருக்குத்தான் உன் நாய்! காயம்பட்டப்ப கூட, அலட்டிக்கலே! ஆனால், அருள் எப்படித் துடித்தான்! அவன் பரிசுக்காக நேசிக்கலே. அதான் பரிசு தேடி வருது.
என் தவறு புரிஞ்சிது. டைகரின் சாதனைக்குக் காரணமும் புரிஞ்சிது! வசதி முக்கியமல்ல; அன்பும் அக்கறையுமே முக்கியம்கறதைப் புரிஞ்சிக்கிட்டேன்!


அப்போ இனிமே பென்னியை...
நானே அன்பா வளர்ப்பேன். பரிசு வாங்கினாலும் வாங்கா விட்டாலும் அன்பு மாறாது; குறையாது!
டைகருக்குக் கிடைத்திருக்க வேண்டிய பரிசை அபகரிச்சதுக்குப் பதில், அம்மாவின் பரிசே கிடைச்சிட்டது. அப்பா நீங்களே டைகருக்கு மாலை போடுங்க!



டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், முதல் தொகுதி - பக். 320, ரூ. 150/ - பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பார்க் 4வது கிராஸ் சாலை, சாய்பாபா காலனி, கோவை - 641 011.

ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன், கிரீம் பிரதர்ஸ், காண்டயால், ஒஹென்ரி, அகதா கிறிஸ்டீன் போன்ற உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் எல்லாம் முழுமையாக ஒரு சில தொகுதிகளாகக் கிடைக்கின்றன. ஆராய்ச்சி செய்ய விரும்புவோர் எந்தக் கோணத்தில் வேண்டுமானாலும் இவைகளை ஆராய்ச்சி செய்ய இத் தொகுதிகள் உதவுகின்றன. உலக புகழ் பெற்ற தாகூர், இக்பால், பாரதியார், பாரதிதாசன் படைப்புகள் ஒரு சில தொகுதிகளாக வந்துள்ளன. ஆனால் இந்த வாய்ப்பு எல்லா இந்திய எழுத்தாளர்களுக்கும் கிடைக்கவில்லை.

இப்பொழுது இந்த அரிய வாய்ப்பு சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களில் முதல் வரிசையில் உள்ள டாக்டர் பூவண்ணனுக் குக் கிடைத்துள்ளது. இது ஆசிரியருக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பு என்பதைவிட சிறுவர் இலக்கியத்திற்குக் கிடைத்த ஏற்றம் என்றே கூறலாம். இந்த முதல் தொகுதியில் பூவண்ணனின் பாடல்கள் எட்டும், கதைகள் ஆறும், படக்கதை ஒன்றும், நாடகம் ஒன்றும், கட்டுரைகளும் அழகிய படங்களுடன் உள்ளன. வெல்லக் கட்டியில் எங்கே கிள்ளித் தின்றாலும் இனிக்கும். சிறுவர் இலக்கிய உலகுக்கு இது ஓர் இனிய புதிய வரவு. இந்திய மொழிகளில் சிறுவர் இலக்கி யத்திற்கு இதுவரை யாரும் தராத சிறப்பு என்பதை எண்ணிப் பெருமை கொள்ளலாம். அடுத்த தொகுதிகள் எப்பொழுது வரும் என்பதை எதிர்பார்க்க வைக்கும் அரிய தயாரிப்பு.

மழலையர் தமிழ், குழ. கதிரேசன், பக். 26, ரூ. 20/- ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதிசாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

வண்ணம் மிக்க ஆங்கில அரிச்சுவடிப் புத்தகங்களைப் போல் தமிழில் இல்லையே என்ற ஏக்கத்தை இது போக்குகிறது. தமிழ் எழுத்துகளை, அறுசுவைகளை அறிமுகப்படுத்தும் பாடல்கள் சந்தம் கொஞ்சுகின்றன.

கரும்பு வெல்லம் இனிக்குது.
கடல் உப்புக் கரிக்குது.
புளியங் காய் புளிக்குது.
பாகற்காய் கசக்குது.
கொய்யாக் காய் துவர்க்குது.
சுட்டி மிளகு உறைக்குது.
அறு சுவையும் இருக்குது.
எந்தச் சுவை பிடிக்குது?

படங்கள், தாள், அச்சு, அமைப்பு, அளவு, எல்லாம் ஒன்று கூடிப் பெருமைப்பட வைக்கின்றன.

சிறுவர்களுக்கான அருந்தமிழ்க் கதைகள் - அருப்புக்கோட்டை செல்வம், பக். 92, ரூ. 18/- கற்பகம் புத்தகாலயம், 18, ராஜாபாதர் தெரு, தி. நகர், சென்னை - 600 017.

கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகமான எழுத்தாளரின் 16 கதைகளைக் கொண்ட தொகுப்பு இது. கோகுலத்தில் வெளி வந்த கதைகளும் உள்ளன. குழந்தைகள் படித்துச் சுவைக்க மட்டுமல்ல, குழந்தைகளுக்கு எழுத வேண்டும் என்று விரும்புவோர்க்கும் இது பெரிதும் உதவும்.

குஷியான பட ஜோக்ஸ், L.G. ஜெம்பு (ஜி.வி.) பக். 64, ரூ. 14/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

குழந்தைகளுக்கு நகைச்சுவை என்பது மிகவும் பிடித்தமானது. நகைச்சுவையை படங்களுடன் சுவைப்பது எத்தனை இனிய அனுபவம்! அந்த இனிய அனுபவத்தைப் பெற ஒரு புத்தகமாகவே தந்துள்ளார்கள். இதன் ஆசிரியர் ஒரு கார்டூனிஸ்ட்டும் கூட. கோகுலத்திலும் வரைந்தவர். சுவைக்குக் கேட்க வேண்டுமா? இதில் உள்ள பெரும்பாலான சிரிப்புகள் குழந்தைகள் சுவைத்து மகிழக் கூடியவை. பாராட்டத்தக்க முயற்சி!

உதயனே எங்கே?

வி.ர. வசந்தன்

12 கண்ணீரே சாட்சி!

ஒரு வாரம் எப்படியோ உருண்டோடி விட்டது. அந்த வாரம் முழுவதும் வேலை செய்ததற்கான சம்பளம் அன்று மாலை கிடைத்து விடும். காளிமுத்துவுக்கு, பட்ட வேதனையெல்லாம் மறந்து போயிற்று. தான் சுதந்திரமாக சம்பாதித்த இருநூற்று நாற்பது ரூபாயும் மாலையில் தன் கைக்கு வந்து விடும். அதைத் தன் விருப்பப்படி செலவு செய்யலாம் என்று நினைத்து குதூகலம் அடைந்தான்.

மாலையில் மேஸ்திரி ஒருவர் சம்பளக் கணக்குகளைச் சரி பார்த்து ஒவ்வொருவருக்கும் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார். தொழிலாளிகள் வரிசையில் நின்று பெற்றுச் சென்றனர். காளிமுத்துவின் முறை வந்தது. அவன் ஆவலோடும், பூரிப்போடும் மேஸ்திரி கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டான். ஆசையோடு அதைப் பிரித்துப் பார்த்தவனுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. அவன் கையில் எண்பது ரூபாய் மட்டுமே இருந்தது!

அவன் திகைத்து நிற்பதைப் பார்த்த மேஸ்திரி, என்ன என்பதைப் போல நெற்றியைச் சுருக்கி அவனைப் பார்த்தார்.

"ரண்டு நாளைக்குத் தாங்க கூலி எம்பது ருவா. ஆறு நாளைக்கு இருநூற்றி நாற்பது ரூபா வரணுங்க'' என்றான் அவன் மிகவும் பணிவாக.

அவனை ஏறிட்டுப் பார்த்த மேஸ்திரி "என்னடா, எனக்கு கணக்குக் சொல்லித் தர்றியா" என்று கேட்டார் காட்டமாக.

"அது இல்லீங்க... ஆறு நான் வேல செஞ்சதுக்கு ரண்டு நாள் கூலி தர்றீங்களே! இது நியாயமா?" என்றபோது அஞ்சா நெஞ்சன் காளிமுத்துவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

''என்னடா, ஆறு நாளும் உனக்கு சாப்பாடு போட்டது என்ன கணக்குன்னு நெனச்சே? தலைக்கு எண்ணெயும், குளிக்க சோப்பும் தந்தது எவன் வீட்டுக் கணக்குன்னு நினைச்சே?... பிச்சைக்கார நாயிங்க, சோத்துக்கில்லாம தெருவில அலையறப்போ, வேலை வேணும்னு வந்து நிக்கறது... வந்து மூணு நாள்ல நியாயம் ரூல்லுன்னு கேட்க வேண்டியது!... இதாப்பாரு, வேணுமின்னா காச வாங்கிட்டுப் போ, இல்லேன்னா ஓரமா நின்னு குலைச்சிட்டிரு.... எனக்கு வேற வேல இருக்கு" என்று ஆவேசமாகக் கத்தி விட்டு மீண்டும் கணக்குப் புத்தகத்தில் தலையை நுழைத்துக் கொண்டார் மேஸ்திரி.

அந்த அலட்சியமான, அவமரியாதையான வார்த்தைகள் காளிமுத்துவை நிலை குலைய வைத்தன. ஏமாற்றத்தின் எல்லையில் நின்று கொண்டிருந்தவனிடம் அவனது இயல்பான முரட்டுக்குணம் சட்டென்று தலை தூக்கிற்று. அவன் தன் கையிலிருந்த பணத்தை மேஸ்திரியின் முகத்தில் விசிறியடித்தான். பாய்ந்து சென்று அவரது மார்ச்சட்டையைப் பற்றி இழுத்து, "நாயி, கீயின்னு பேசினே, பல்ல உடைச்

சிடுவேன். என்ன மரியாதை கெட்டத் தனமா பேசறே?... சாப்பாட்டுச் செலவு போகத்தான் நாற்பது ரூபாய்னு பேசிட்டு, இப்ப பேச்சை மாத்தறியா?" என்று கூச்சலிட்டு ஒரு தள்ளுத் தள்ளினான்.

அவன் தள்ளிய வேகத்தில் நாற்காலியில் அலங்கோலமாக விழுந்த மேஸ்திரி, பயந்து போய் பெரிதாக ஓலமிட, மற்ற தொழிலாளர்கள் ஓடிவந்து காளிமுத்துவைப் பிடித்துக் கொண்டனர்.

ஆத்திரம் தணியாமல் மீண்டும் காளிமுத்து திமிறிக் கொண்டு அவர் மீது பாய எத்தனித்தான். ஆனால், தொழிலாளர்கள் அவனை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதால் மேஸ்திரி பிழைத்தார்.

அங்கு எழுந்த பெரும் சத்தத்தைக் கேட்டு அவ்விடம் வந்த மேனேஜரின் பின்னால், போய்ப் பதுங்கிக் கொண்ட மேஸ்திரி, நடந்ததை ஒன்றுக்கு இரண்டாச் சொல்லி ஒப்பாரி வைத்தார்.

சற்று நேரம் ஒன்றும் பேசாமல் நின்ற மானேஜர், காளிமுத்துவைத் தன்னோடு வருமாறு சைகை காட்டிவிட்டு நடந்தார். தன் அலுவலக அறையை அடைந்ததும் புன்முறுவலுடன் அவனைப் பார்த்தவர், தன் பையிலிருந்து இருநூறு ரூபாய் எடுத்து அவனிடம் நீட்டினார். அவனுக்கு என்ன சொல்வது என்று முதலில் புரியவில்லை. ஆனாலும், ஆசையோடு அதை வாங்கிக் கொண்டான்.

புன்சிரிப்பு மாறாமலே அவர், "தம்பி, காளிமுத்து, உன்னைப் போல புத்திசாலிகளை வச்சு, வேலை வாங்க எங்களுக்குச் சாமர்த்தியம் போதாது... அதனால, நாளையில இருந்து நீ வேலைக்கு வர வேண்டாம்" என்றார்.

திடுக்கிட்டு அவரைப் பார்த்த காளிமுத்து, "சார்...." என்று பதறினான்.

"நீ இங்கிருந்து போகலாம். வேற எதுவும் பேச வேண்டாம்" என்று கூறிய அவரது முகத்தில் இதுவரையிலும் இருந்த புன்னகை அகன்று கோபம் அனலாக வீசியது!

காளிமுத்து அவரிடம் கெஞ்சிப் பார்த்தான்; அழுது பார்த்தான்; புலம்பினான். ஆனால், எதுவும் அந்த மானேஜரின் இரக்கத்தைப் பெற்றுத் தரவில்லை. பேசக் கூட விரும்பாத அவர், அவனைப் பார்த்து வெளியே போகுமாறு சைகை காட்டினார்.

வேறு வழியின்றி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான் காளிமுத்து. 'நாளையிலிருந்து சாப்பாட்டுக்கு என்ன வழி? இந்த இருநூறு ரூபாய் எத்தனை நாளைக்குப் போதும்? அதற்குப்பின் என்ன செய்வது?' என்ற கேள்விகள் அவன் முன் பயங்கரமாக எழுந்து நின்றன. தன் கையிலிருந்த பணத்தை வெறித்துப் பார்த்தான். தாங்க முடியாத துயரம் பீறிட்டுக்



கொண்டு வந்தது.

'ஐயோ, இந்தப் பணத்திற்காகத் தானே வார்டனோடு சேர்ந்து திருட்டுத்தனம் பண்ணினேன். கருணை இல்லத்தை உதறிவிட்டு வெளியேறினேன். இதோ, இன்றும் இந்தப் பணத்திற்காகத் தானே மேஸ்திரியை அடித்துவிட்டு நிராதரவாக நிற்கிறேன்' என்று மனதுக்குள் புலம்பினான்.

மார்கரெட் அம்மையாரை நினைத்த போது காளிமுத்துவின் துக்கம் இன்னும்

அதிகரித்தது. வஞ்சகமும் ஏமாற்றும் சுயநலமும் நிறைந்த உலகத்தை அவன் இப்போது தான் சந்திக்கிறான். கருணையில்லத்தில் தான் அனுபவித்த அன்பும், பரிவும் எத்தகையது என்பது அவனுக்கு



இப்போதுதான் புரிந்தது. சுயநலம் நிறைந்த இந்த உலகத்தில் மார்கரெட் அம்மையாரைப் போலத் தொண்டுள்ளம் கொண்டவர்கள் சிலராவது இருப்பதால் தான் அன்பு என்பதற்கு அர்த்தம் என்ன என்றாவது புரிகிறது.

'அம்மாவின் அன்பை உணராமல் அவரது தூய்மையான மனதை எப்படியெல்லாம் புண்படுத்தி இருக்கிறேன்! வாய்க்கு வந்தபடியெல்லாம் அவதூறு பேசியிருக்கிறேன்! சை, என்னைப் போன்ற மிருகங்கள் வாழ்வதைவிட, சாவதே மேல்' என்று நினைத்துக் குமுறிக் குமுறி அழுதான்.

இருட்டும் வரையிலும் கால் போன போக்கில் எங்கெங்கோ அலைந்த காளிமுத்துவுக்கு உதயனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மரத் தொழிற்சாலையின் பின்புறமாக வந்து மூங்கில் கொட்டகைக்குள் நுழைந்தான் காளிமுத்து.

ஒரு ஓரமாக உதயன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவன் அருகில் வந்து நின்ற காளிமுத்து எந்தப் பரபரப்பும் பதட்டமும் இல்லாமல் அவன் உறங்குவதைப் பார்த்து வியந்தான். அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த காளிமுத்துவின் கண்கள் கலங்கின. "உதயா படிச்சு பெரிய ஆளா வரணும்னு எத்தனை ஆசையா கருணை இல்லத்துக்கு வந்தே...? என்னையும் கெடுத்துக் கொண்டு உன்னையும் கெடுத்து இந்த நிலைக்கு ஆளாக்கிட்டேனே! என்னைத் தயவு செய்து மன்னிச்சிடு' .... நாளைக்குக் காலையில நீ எழுந்திருக்கும் போது இந்தக் காளிமுத்து உயிரோட இருக்க மாட்டான்..." என்று முணுமுணுத்தான்.

பின் கண்களைத் துடைத்துக் கொண்டு, ஒரு முடிவுக்கு வந்தவனாகச் சட்டென்று திரும்பி நடந்தான் காளிமுத்து. இருட்டுக்குள் புகுந்து ஒற்றையடிப் பாதை வழியாக விறுவிறுவென்று நடக்கலானான். அவனைத் தடுக்க முயற்சிப்பதுபோல் பாதையின் குறுக்கே விழுந்து இடறிய செடிகளையும், கொடிகளையும் முரட்டுத்தனமாக விலக்கிக் கொண்டு, மனதைக் கல்லாக்கியவனாய் நடந்தான்.

மேட்டில், இரயில் பாதை தென்பட காளிமுத்து, பாய்ந்தேறி அதனருகே வந்து நின்றான். தொலைவில் இரயில் வருவது தெரிந்தது. அதன் முன்புற விளக்கின் வெளிச்சத்தில் தண்டவாளங்கள் பளபளவென்று மின்னின. இரயில் மிக அருகில் வந்துவிட, அதன் பேரிரைச்சல் அவன் காதுகளுக்குள் புகுந்து உடல் முழுவதையும் அதிரச் செய்தது. தன் உயிரைப் போக்கிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்ட காளிமுத்து, இரயில் அருகில் வந்ததும் தன் இரு கைகளையும் விரித்துக் கொண்டு தண்டவாளத்தின் குறுக்கே பாய்ந்தான்.


அதே நேரத்தில் "காளிமுத்து" என்ற பெருஞ்சத்தம் அவனுக்குப் பின்னால் எழுந்தது. தண்டவாளத்தில் விழப்போன அவனை யாரோ மிகப் பலமாகப் பிடித்துத் தள்ளினார்கள். தள்ளப்பட்ட வேகத்தில் அவன் தண்டவாளத்தில் விழாமல் மறுபுறம் விழுந்து சரிவில் உருண்டான். கீழே விழுந்தவன் சமாளித்து எழுந்தபோது அவனெதிரே, இரயில் படு வேகமாக தடதடப் பேரிரைச்சலுடன் அந்த இடத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

தன்னை இரயில் சக்கரங்களுக்கு பலியாக விடாமல் மீட்டுக் காத்தது யார் என்று புரியாமல் மேலே பார்த்தான். மேட்டின் மீது உதயன் நின்று கொண்டிருந்தது. நிலவொளியில் நன்கு தெரிந்தது.

ஓரேப் பாய்ச்சலாகக் கீழிறங்கி வந்த உதயன், காளிமுத்துவைக் கட்டி அணைத்துக் கொண்டு, "காளிமுத்து, என்ன காரியம்டா செய்ய இருந்தே? நான் மட்டும் இப்ப வரலேன்னா என்ன ஆகியிருக்கும்?" என்று நடுங்கியவாறு அவன் முகத்தை நிமிர்த்தினான்.


காளிமுத்து அவன் தோளில் தன் முகத்தைச் சரித்துக் கொண்டு, "என்னை எதுக்குக் காப்பாத்தினே உதயா...? நான் உயிரோட வாழறதை விட சாகறதுதான் நல்லது... என்னால எத்தனை பேருக்குத் துன்பம்? அம்மாவோட அன்பை நானும் உணராம, உன்னையும் உணரவைக்க விடாம தடுத்துட்டேன்...? எப்படி ஆர்வமா படிச்சுட்டு இருந்த உன்னைக் கெடுத்து, இந்த நிலைக்கு ஆளாக்கிட்டேன்..? நான் செய்த இந்தப் பாவங்களுக்கு எனக்கு மன்னிப்பே கிடையாது" என்று விம்மினான்.

உதயன் அவன் தோளில் அன்புடன் தட்டி அமைதிப்படுத்தினான். "காளிமுத்து, செய்ததெல்லாம் தப்புன்னு எப்ப நீ உணர்ந்திட்டியோ, அப்பவே நீ நல்லவனாயிட்டேன்னு அர்த்தம்... உன்னோட கண்கள்ல இருந்து வழியற கண்ணீரே இதுக்கு சாட்சி... திருந்தி வர்ற நெஞ்சங்களை அம்மா நிச்சயமா மன்னிப்பாங்க. நீ பயப்படாதே" என்றான்.



உதயன் பேசுவதை நம்பாமல் தலையசைத்த காளிமுத்து, "என்னைக் கூடவா?" என்று கேட்டான்.

"நிச்சயமாக மன்னிப்பாங்க காளிமுத்து. அம்மாவோட அன்பை நாம அனுபவபூர்வமா உணர்ந்திருக்க கிடைச்ச ஒரு சந்தர்ப்பமா இதை நெனைச்சிக்கலாம். தன்னலமில்லாத அந்த அன்பை இனியும் சந்தேகிக்க வேண்டாம். கருணையில்லத்தை சொந்த வீடா நெனச்சு, அம்மா காட்டற வழியில நடக்கறதா நான் முடிவு



பண்ணிட்டேன்... நீ என்ன சொல்றே?" என்று கேட்டான் உதயன்.

அவன் சொல்வதற்கு இசைந்தவனாக மெளனமாகத் தலையசைத்தான் காளிமுத்து. அவன் முகத்தில் இதுவரை குடியிருந்த சஞ்சலமும், கலவரமும் அகன்று நிம்மதியும், நம்பிக்கையும் சுடர்விட ஆரம்பித்தது.

'க்ரே, க்ரே' என்று ஒலி எழுப்பிக் கொண்டு இரவுப் பறவைகள் கூட்டமாக வந்து, அங்கிருந்த பனைமரங்களின் ஓலைகளை அசைக்க, பனை ஓலைகள் 'களகள' வென்று சப்தித்தன.

இருவரும் இரயில் பாதை மேட்டில் அமர்ந்தவாறு அன்றிரவு முழுவதும் மார்கரெட் அம்மையார் தங்களிடம் காட்டிய அன்பைப் பற்றியும், அதற்குக் கட்டுப்படாமல் வேண்டுமென்ற தாங்கள் முரண் பட்டதைப் பற்றியும் பேசிப் பேசி தங்கள் மனச்சுமையைக் குறைத்துக் கொண்டார்கள்.

எங்கெங்கிருந்தோ கரடு முரடாக வெட்டி எடுத்து வரும் படிகங்கள் பட்டை தீட்டியதும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மணிக் கற்களாக ஜொலிப்பதைப் போல், மார்கரெட் அம்மையாரின் தூய அன்பில் மெருகிடப்பட்ட அந்தப் பண்படாத நெஞ்சங்களும் ஒளிவிடும் மணிக்கற்களாய்ப் பிரகாசித்தன.


எதையோ நினைத்துக் கொண்ட காளிமுத்து, "அது சரி, எப்படி நீ என்னைப் பின் தொடர்ந்து இங்க வந்தே?" என்று கேட்டான்.

"நீ வந்து என் காலடியில நின்னு புலம்பிக்கிட்டிருந்திருந்தியே, அப்ப உண்மையிலேயே நான் தூங்காமத்தான் படுத்திருந்தேன். நிச்சயமா என்னைப் பார்க்க வராம, நீ எங்கேயும் போக மாட்டேன்னு எனக்குத் தெரியும்."


பொழுது புலர்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இருவரும் எழுந்து கைகோர்த்துக் கொண்டு நடந்தார்கள். மார்கரெட் அம்மையாரின் கருணை பொழியும் அன்பு நெஞ்சம் அவர்களை மீண்டும் நிச்சயமாக அரவணைத்துக் கொள்ளும்.

புதிய உதயம் புலர்ந்து கொண்டிருந்தது.


(முற்றும்)



தாயின் மணிக்கொடி!
தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல்வந்தே மாதர மென்றே
பாங்கி னெழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!
(தாயின்)
கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர் - தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்.
(தாயின்)
சேர்ந்ததைக் காப்பது காணீர் - அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத - நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!
(தாயின்)
— பாரதியார்




பேட்ஸ்மேன்



நீங்கள் குறிப்பிட்டது போல் விடுமுறையை வெயிலில்தான் கழித்தேன். அதாவது தினந்தோறும் கிரிக்கெட் விளையாடினேன். என் வயதிற்கு நான் சிறந்த பேட்ஸ்மேன் என்று நண்பர்கள் கூறுகிறார்கள். மாலை நேரங்களில என் சகோதர, சகோதரிகளுடன் தஞ்சைக்குச் சென்று பூங்கா, மணிமண்டபம், தொல்காப்பியர் மண்டபம், சரஸ்வதி மஹால், பெரிய கோயிலின் கும்பாபிஷேக முன் பணிகளையும் பார்த்து வந்தோம்.

த. பரதன், மன்னார்குடி.



போட்டோ வேலை....

எங்கள் ஊரில் உள்ள போட்டோ ஸ்டுடியோவில் இந்த விடுமுறையில் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு போட்டோ எடுத்தல், கழுவுதல் போன்ற வேலைகளைக் கற்றேன். ஒருநாளைக்கு இருபது ரூபாய் ஊதியமாகக் கொடுத்தார்கள். பணத்தை மேற்படிப்புச் செலவுக்கு வைத்துக் கொண்டேன்.

ஆர். ரவிவர்மன், கபிஸ்தலம்.

அப்பாவுக்கு உதவியாக!



என் பெற்றோர்கள் முறுக்கு, சீடை வியாபாரம் செய்கின்றனர். அதை உதவியாளர் ஒருவர் கடைக்குக் கடை சென்று

விற்று விட்டு வருவார். எனக்கு இந்தக் கோடை விடுமுறை துவங்கிய அன்றே என்ன காரணமோ தெரியவில்லை உதவி யாளர் வேலையை விட்டு நின்று விட் டார். அன்றிலிருந்து அந்த வேலையை நானே செய்ய ஆரம்பித்தேன். "உன்னால் உதவியாளருக்கு அளிக்க வேண்டிய ஊதி யம் மிச்சம். வரும் வருடம் உன் பள்ளி படிப்புச் செலவினங்களை எளிதில் சமாளிக்கலாம்" என்றார் அப்பா. அப்பா சொன்னதிலிருந்து மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. இந்த விடுமுறை மட்டுமல்ல, இனி ஓய்வு நேரங்களிலும் பெற்றோர்க்கு உதவியாக இருக்கத் தீர்மானித்து இருக் கிறேன்.

வி. அடைக்கம்மை, சிவயோகபுரம்.



இரு தொழில்கள்...

எனக்கு ஓவியம் வரைவதில் மிகுந்த ஈடுபாடு உண்டு. இந்த விடுமுறையில் எங்கள் ஊரில் உள்ள சிறந்த ஓவியரிடம் சேர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்டேன். மற்ற நேரங்களில் என் தந்தையுடன் சேர்ந்து தச்சுத் தொழிலையும் செய்து வருகிறேன். கோடை விடுமுறையில் இரு தொழிலையும் கற்று ஆனந்தமாக இருக் கிறேன்.

த. பரணி, வரிக்கல் கிராமம்.



பயனுள்ள வகையில்.....

கோடை விடுமுறையைக் கழிக்க நானும், எனது நண்பர்களும் சேர்ந்து திட்டமிட்டோம். எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஏழை மாணவர்களுக்கு பள்ளிச் சீருடை, பாடப் புத்தகங்கள், பண உதவி செய்யத் தீர்மானித்தோம். இங் குள்ள பெரிய மனிதர்கள், உதவி செய்யும் எண்ணம் கொண்ட பலரிடமும் சென்று ஆதரவு கேட்டு வந்தோம். எங்கள் ஆர்வத் தைக் கண்டு பலரும் உதவ முன்வந்தார் கள். எங்கள் பகுதி மக்கள் அனைவரும் எங்களின் முயற்சியைப் பாராட்டுகின் றனர். விடுமுறையைப் பயனுள்ள வகை யில் கழித்த சந்தோஷம் எங்கள் அனை வருக்கும் ஏற்பட்டுள்ளது.

ச. மகேஷ், மூலப்பாளையம்.




படிக்க வைத்தேன்!

நான் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி யுள்ளேன். இந்த விடுமுறையில் எங்கள் கிராமத்தில் உள்ள சிறுவர்களை அழைத்து மாலை நேரங்களில் அடுத்த வருடப் பாடங்களைச் சொல்லித் தந்தேன். மூன் றாம் வகுப்புக்கு மேல் உள்ள மாணவர் களிடம் கோகுலம் இதழைக் கொடுத்து அதில் உள்ள கதைகளை எழுத்துக் கூட் டிப் படிக்கக் கற்றுக் கொடுத்தேன். அவர் களும் ஆர்வத்துடன் பயின்றார்கள். இது பயனளிக்கக்கூடியதுடன் என் மனதுக்கும் நிறைவு அளிக்கக்கூடியதுதானே?

ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

அனுபவம் எழுதினேன்!



கதைகள்....

விடுமுறையில் எங்கள் பாட்டி சேமித்து வைத்திருக்கும் கோகுலத்தின் கதைகளைப் படித்து என் தங்கை நந்தினி, ஜனனிக்குச் சொல்லிக் கொடுத்தேன். ஹிந்தி பாடம் படிக்க ஆரம்பித்திருக்கிறேன்.

சிவபெருமான், இரணியல்.



பெயின்ட் அடித்தேன்..

கடையில் சென்று பெயின்ட் வாங்கி வந்தேன். வீட்டில் உள்ள மரச்சாமான்கள் மற்றும் இரும்பு சாமான்கள் அனைத்தையும், ஒருநாளைக்கு ஒன்று வீதம் பெயின்ட் அடித்து பளபளப்பாக்கினேன். என் பெற்றோர் பாராட்டியது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

த. வரதன், மன்னார்குடி.



மருத்துவருக்கு உதவியாக....

கோடை விடுமுறையில், மருத்துவர் ஒருவரிடம் உதவியாளராகப் பணிபுரிந்தேன். முதலுதவி செய்வது பற்றியும், அவசரத் தேவைக்கான சில மாத்திரைகளைப் பற்றியும் அறிந்து கொண்டேன். வேலை செய்ததால் கிடைத்த இருநூறு ரூபாயை பாடப் புத்தகங்கள் வாங்குவதற்கும், ஏனைய பள்ளிச் செலவினங்களுக்கும் பயன்படுத்திக் கொண்டேன்.

கே. ராஜேஷ்குமார், ஆனந்தபுரம்.



நாங்கள் சொந்த ஊரான இரணியலுக்குச் சென்றோம். பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். என் தம்பி சேமித்து வைத்திருந்த கோகுலத்தைப் படித்து ரசித்தேன். ஏன் நாமும் விடுமுறை அனுபவத்தை எழுதினால் என்ன? என்று தோன்றியது. எழுதி விட்டேன்.

க. சத்யநாராயணன், அண்ணா நகர்.

நாய்

பாலைத் தட்டில் ஊற்றினால்
வாலைக் குழைத்துக் குடித்திடும்


மாற்றார் யாரும் வந்திட்டால்
மறித்தே நின்று குரைத்திடும்

நாங்கள் வெளியே செல்கையில்
நன்கு வீட்டைக் காத்திடும்.

நன்றி என்ற சொல்லுக்கு
நாய்தான் இலக்கணம் மறுப்பீரோ?

ர. சோமநாதன், விக்கரவாண்டி.





பேருந்து!

பேருந்து நம் பேருந்து
பயணம் செய்யும் பேருந்து

ஆறு சக்கரப் பேருந்து
அழகு நீளப் பேருந்து

சுமைகள் ஏற்கும் பேருந்து
சொகுசுப் பயணப் பேருந்து

[illegible] நாகராஜன்,
நாகமங்கலம்.

கட்டெறும்பு

கட்டெறும்பு மாமாவே
கண்டு விட்டேன் ஓடாதீர்!
வீட்டில் குடி இருந்து நீர்
வீண் வம்பு பண்ணாதீர்!

'சுறுக்' என்று எங்களை
சுதந்திரமாய் கடிக்கிறீர்!
விரையும் ரயில் போலவே
வேகமாக மறைகிறீர்!

படைகள் ''அதிகம்'' இருந்திடும்
பலத்தில் வந்தா கடிக்கிறீர்?
உடனே மறைந்து தப்புங்க
உதவ யாரும் இல்லையே!

- மு. ருக்மணி, தேனி.




அன்பு அண்ணன்

அண்ணன் மிகவும் நல்லவன்
அன்பு உள்ளம் கொண்டவன்
பாசத் தோடு இருப்பவன்
பாடம் சொல்லித் தருபவன்

உலக நடப்பைச் சொல்லியே
உழைக்கத் தூண்டி விடுபவன்
பெரியோர் சொல்லைக் கேட்பவன்
பெயரும் புகழும் பெறுபவன்!

த. பழனி, வரிக்கல் கிராமம்.



பட்டாம் பூச்சி

சின்ன சின்ன பட்டாம்பூச்சி
சிறகு அடிக்கும் பட்டாம்பூச்சி
வண்ண வண்ண பட்டாம்பூச்சி
வட்டம் அடிக்கும் பட்டாம்பூச்சி
மலரில் அமரும் பட்டாம்பூச்சி
மனதைக் கவரும் பட்டாம்பூச்சி
உலா வரும் பட்டாம்பூச்சி
உவகை தரும் பட்டாம்பூச்சி

பொன். குமார், சேலம் - 6.

ஔவை வழியில்...

அன்புடன் எவர்க்கும் உதவிடுவீர்
ஆசானை உயர்வு செய்திடுவீர்
இனிக்க இனிக்க பேசிடுவீர்
ஈகையில் உயர்ந்து சிறந்திடுவீர்
உடலை உறுதி செய்திடுவீர்
ஊக்கம் கொண்டே உழைத்திடுவீர்
எளியோர் மகிழ உதவிடுவீர்
ஏணி போல் உயர்த்த முயன்றிடுவீர்
ஐயம் தெளிந்து கற்றிடுவீர்
ஒற்றுமை உணர்வை வளர்த்திடுவீர்
ஓடி ஆடிப் பழகிடுவீர்
ஔவை வழியில் நடந்திடுவீர்


- எஸ். பிரின்சி,
அருப்புக்கோட்டை.







விதம்விதமான சோப்பால் தோல் பாதிக்குமா?



டாக்டர். கு. கணேசன்

● க. வேலவன், மானாமதுரை.

? வயிறு நிரம்ப சாப்பிட்டு முடித்ததும் தூக்கம் வருவது போல் உள்ளது, ஏன்?

! நாம் சாப்பிட்டு முடித்ததும் உணவு ஜீரணம் ஆகவேண்டுமல்லவா? அதற்கு இரைப்பையின் சுவர்களுக்குக் கூடுதலாக ரத்தம் வந்து சேருகிறது. இதனால் மூளை மற்றும் பிற உடல் உறுப்புகளுக்குச் செல்கிற ரத்தம் சற்று குறைகிறது. முக்கியமாக மூளைக்குச் செல்கிற ரத்தத்தின் அளவு குறைந்தவுடன் உடலில் ஒரு மந்த நிலை தோற்றிக் கொள்கிறது. இதன் விளைவாக வயிறு நிரம்ப சாப்பிட்டதும் தூக்கம் வருவது போல உணர்வு உண்டாகிறது.



● வி. தயாநிதி, வி. இருதயராஜ், சென்னை - 82.

? டாக்டர், வீட்டில் வளர்க்கும் நாய் மீது ஏன் உண்ணி வளர்கிறது? அதைப் போக்கும் மருந்து என்ன?

! சுத்தமில்லாத நாய் மீதுதான் உண்ணி வளரும். உங்கள் வீட்டு நாய்க்கு நிறைய உண்ணி இருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். முதலில் சுத்தத்தோடும் சுகாதாரத்தோடும் உங்கள் நாயை வளர்க்கப் பழகுங்கள். தொடர்ந்து அருகிலுள்ள கால்நடை மருத்துவரை ஆலோசித்து உண்ணிக்குரிய மருந்தை வாங்கி உபயோகியுங்கள். பலன் கிடைக்கும்.

● எஸ். புனிதா, குருசாமிபாளையம்.

? சிலருக்கு மலம் கழிக்கும்போது மலவாயில் சிறிது சதை வெளிவருகிறதே டாக்டர்...! இதற்கு என்ன மருத்துவம்?

! இதை 'அண்டித்தள்ளுதல்' (PROLAPSE RECTUM) என்போம். மலவாயில் உள்ள குடல் தசைகள் பலவீனமடைந்து கீழிறங்குவதால் வருகின்ற குறைபாடு இது! இதற்கு மருந்து, மாத்திரைகள் உதவாது. அறுவை சிகிச்சைதான் சிறந்த தீர்வு.

● கமால்பாட்ஷா, கல்தான்பேட்டை.

? கனவு வராமல் தடுக்க ஏதேனும் வழி உண்டா?

! இல்லை, தம்பி! கனவு என்பது நம் உள்மன ஆசைகளின் வடிகால்! இதனைத் தடுக்க முடியாது. கனவே வராமல் இருக்க வேண்டுமென்றால் பிறவிக் குருடராக இருக்க வேண்டும். அப்போதுதான் கனவு வராது.

● எம். ராஜவேல், அருப்புக்கோட்டை.

? எனக்கு அடிக்கடி சளித்தொல்லை ஏற்படுவதில்லை. இருந்தாலும் நான் அடிக்கடி ஹால்ஸ், விக்ஸ் போன்ற பிட்டாய்களைச் சாப்பிடுகிறேன். இதனால் ஏதேனும் கெடுதல் விளையுமா, டாக்டர்?

! என்ன ராஜவேல்... இவ்வளவு மெதுவாகக்

கேட்கட்டுமா டாக்டர்?

கேட்கிறாய்? இந்தக் கேள்வி இன்னும் நிறைய பேருக்குக் கேட்க வேண்டுமே! நீ மட்டுமில்லை, ராஜவேல்... இன்னும் நிறைய தம்பி, தங்கைகள் இப்படித்தான் தேவையில்லாமல் இந்த மருந்து கலந்த மிட்டாய்களைச் சாப்பிடுகிறார்கள். இது ஒரு தவறான பழக்கம்; சொல்லப் போனால் ஒரு போதைப் பழக்கம்! இந்த மிட்டாய்களுக்கு அடிமைப்பட்டு விடுவதால்தானே இவற்றை நீங்கள் அடிக்கடி சாப்பிடுகிறீர்கள்? இதனால் என்னென்ன கெடுதல்கள், தெரியுமா? ஜல தோசமின்றி இந்த மிட்டாய்களைச் சாப்பிட்டால் தொண்டையில் புண் உண்டாக்கி விடும். வாய்ப்புண் வந்து சேரும். பற்சொத்தை ஏற் படும். உணவின் சுவை முழுவதுமாக உணர முடியாமல் போகும். இந்தப் பழக்கம் இனிமேல் தேவையா, ராஜவேல்? யோசித்து செயல்படு.

● **ஆ. அருண் இளஞ்செழியன், திருச்சி – 17.**

? உடம்புக்கு விதம்விதமான சோப்பு போட்டுக் குளிப்பதால் தோல் பாதிக்கப் படுமா?

! சந்தேகமே வேண்டாம், தம்பி! நிச்சயம் தோல் பாதிக்கப்படும். ஒவ்வொரு சோப்பிலும் வெவ்வேறு ரசாயனம் உண்டு. அவை எல் லாமே நம்





உடம்புக்கு ஒத்துக் கொள் ளும் என்று உறுதிகூற முடி யாது. ஒவ்வாமை (AL-LERGY) யை ஏற்படுத்த லாம். தோலில் சிவந்த தடிப்புகள், அரிப்பு, புண் உண்டாகலாம். கரப்பான் (ECZEMA) போன்ற தோல் நோய்கள் வரலாம். இவற்றைத் தவிர்க்க அடிக்கடி சோப்பை மாற்றக் கூடாது. ஏதாவது ஒரு சோப்பை தொடர்ந்து உபயோகித்து வரு வது நல்லது.

● **இந்தியன், கபிஸ்தலம்.**

? நமது உடலில் முடியை வெட்டும்போது வலி ஏற்படுவதில்லையே, எதனால் டாக்டர்?

! முடியில் வலியை உணர்ந்தக்கூடிய நரம்புகள் இல்லை. அதனால்!

● **ஆர். பாலு, வடக்கவேந்தல்.**


? என் கன்னம் ஒட்டியிருக்கிறது. இதை சரிசெய்ய நான் என்ன செய்ய வேண்டும், டாக்டர்?

! தினமும் 30 நிமிடங்களுக்கு 'எடைப் பயிற்சி' களை செய்யலாம். (டம்பெல், பார்பெல் மற்றும் உடற்பயிற்சிக் கருவிகளைக் கொண்டு செய்யப்படும் பயிற்சிகளுக்கு எடைப் பயிற்சி கள் என்று பெயர்). புரதம், மாவுச் சத்து, கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை நிறைய சேர்க்க வேண்டும். முக்கியமாக பால், முட்டை, மீன், இறைச்சி, வெண்ணெய், நெய், வாழைப்பழம், வேர்க்கடலை, சுண்டல், காய்கறிகள், கீரைகள் போன்றவற்றை தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தின மும் எட்டு மணி நேரம் உறக்கம் அவசியம். வீணாகக் கவலைப்படுவதைத் தவிர்க்கவும். தியானம் செய்யலாம். இப்படிச் செய்து வந்தால் கூடிய விரைவில் உங்கள் ஒட்டிய கன்னம் ஊதிய பலூன் போலாகும்.

● **என். ராஜலெட்சுமி, மேலப்பாதி.**

? சுளுக்குப் பிடிப்பு என்பது என்ன, டாக் டர்? இதனால் உடம்பில் ஏற்படும் கெடு தல்கள் என்ன?

! நமது தவறான இயக்கம் காரணமாக, உடம்பில் ஏதேனும் ஒரு பகுதியில் தசைகள் தற்காலிகமாக இயங்க மறுப்பதை 'சுளுக்குப் பிடிப்பு' (MUSCLE SPRAIN) என்கிறோம். இதன் விளைவாக அந்தத் தசைகளை சார்ந் திருக்கும் உடல் இயக்கம் தடைபடுகிறது. அந்த இடங்களில் வலி ஏற்படுகிறது. உதாரணமாக மார்புத் தசைகளில் பிடிப்பு ஏற்பட்டால் சுவாசிப்பது சிரமம். முதுகுத் தசையில் இப் படி ஏற்பட்டால் குனிவது, திரும்புவது சிர மம்; கால்தசை என்றால் நடப்பது சிரமம்.




“சில்லரை விஷயத்தையெல்லாம் பெரிசா எடுத்துக்கிறாரே? யார் அவர்?”
“கண்டக்டர்!”
“இந்த வருஷம் கட்டுரைப் போட்டியில் உனக்குதானே முதல் பரிசாம்! எப்படிடா வாங்கினே?”
“அதுல கலந்துகிட்டது நான் ஒருத்தன் மட்டும்தானே!
— பொய்கை என். தமிழ்ச்செல்வன்
சிரிப்...
''பரீட்சையிலே முதல் மதிப்பெண் வாங்கினா எங்கப்பா 'குடை' பரிசா வாங்கித் தரேன்னு சொல்லி இருக்கார்!''
''கேள்விப்படாத பரிசா இருக்கே?''
''முதல் மதிப்பெண் வாங்கினால் மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டுமாமே? அதான்...!''
— பி.ஆர். பார்த்தசாரதி
“பாடப் புத்தகம் இருக்கா சார்...?”
“எங்கே போய் பாடப் போறே?”
— சீர்காழி வி. ரேவதி

ஒன்னி படிப்பாளா?

அய்க்கண்

பூமிநாதபுரத்தில் பஸ்ஸை விட்டு இறங்கி வழி விசாரித்துக் கொண்டு கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப்பாதையில் ஒன்றரை மணி நடந்து, வில்லுப் பட்டிக்கு வந்து, ஊரை விட்டுத் தள்ளியிருந்த ஆசிரமச் சோலையைப் பார்த்தபோது இதுவரை பட்ட சிரமம் அத்தனையும் அறவே மறந்து போனது! அத்தனை குளுகுளு! அப்படி ஓர் அற்புத நந்தவனம்!

தோப்பிற்குள் நுழைந்தேன். மூன்று இளைஞர்கள் வாழைகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தனர்.

என்னைப் பார்த்த ஒருவர் ஆசிரம வாசலுக்கு வந்தார். நான் பயிற்சி பெற வந்ததைச் சொன்னேன்.

"உள்ள வா தம்பி! ஐயா பன்னம்பறிச்சான் பட்டிக்குக் காரியமாப் போயிருக்காரு. வர்ற நேரம் தான், உக்காருங்க" என்று ஒரு கல்லைக் காட்டினார்.







இளைஞர்களிடம் பேச்சுக் கொடுத்தேன். கல்லுப்பட்டியில் அமைந்திருந்த அந்த ஆசிரமம் முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதாம். ஆரம்பித்த பெருமைக்கு உரியவர் "ஐயா", என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட மாணிக்கம் ஐயா. ஆசிரியராக அந்த ஊருக்குள் காலடி வைத்த அவர், பள்ளியை ராமகிருஷ்ணர், விவேகானந்தர் காட்டிய அருள் வெள்ளத்தைப் பரப்பும் வற்றாத அருவிகளாக அமைத்தார். அங்கே பயின்ற ஒவ்வொரு மாணவனையும் எளிமைக்கு இலக்கணமாக்கி அறிவொளி வீசும் அருட் சுடராக்கி, அறியாமை இருட்டை விரட்டும் மகத்தான பணியைச் செய்து வந்தார். கல்வியோடு யோகாசனம், பிராணயாமம், ஆழ்நிலைத் தியானம் எல்லாம் உண்டு. விடுமுறை கால சிறப்புப் பயிற்சிகளும் உண்டு. அதில் பங்கு கொள்ளத் தான் தாத்தா என்னை அனுப்பி வைத்திருந்தார்.

இரண்டு பெரியவர்கள் ஆசிரமத்துக்குள் வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

தாடியில்லாமல், மீசையில்லாமல், தூய வெள்ளை உடையிலிருந்த அந்தப் பெரியவர் - அவர்தான் மாணிக்கம் சாராக இருக்க வேண்டும் என்பது, பார்த்தாலே புரிந்தது. உடன் வந்தவர் அவருக்கு நெருங்கிய நண்பராக இருக்க வேண்டும்.

"நம்ம பெரிய கருப்பன், தன் மக வள்ளியைப் பள்ளிக்குப் போகவிடாமல் தடுத்துட்டார். புதுசா ரெண்டு எருமை மாடு வாங்கியிருக்கார். அதை மேய்க்க வள்ளியைக் கட்டாயப்படுத்தறார்" என்றார் நண்பர்.

"கடவுளே! கடவுளே!" என்று துயரம் தாங்காமல் தலையைப் பிடித்துக் கொண்டார் மாணிக்கம் சார்.

சிறுமியின் கல்விக்குத் தடை

போடும் தந்தை! என மனத்துள், குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா ஐயாவின் "ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே, நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்" ஒலித்தது.

'நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்க வேண்டிய ஒரு சிறுமியை இன்று மாடு மேய்க்க அனுப்புவதா? அதுவும் அவள் தந்தையே! என்று நான் மனதுக்குள் கொதித்தேன்.

வேதனை தேங்கிய முகத்துடன் உள்ளே நுழைந்த மாணிக்கம் சாரிடம் வலியப் போய் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். தாத்தாவின் பெயரைக் கேட்டதும், அவர் முகத்தில் அந்த வேதனை நடுவிலும் ஒரு மகிழ்ச்சி.

அதே சமயம்....


''ஐயோ! அவரைக் காப்பாத்துங்க ஐயா!... உடம்பெல்லாம் எரியறதா வீட்லே அலறிட்டிருக்காரு'' என்று கதறிக் கொண்டே ஒரு பெண்மணி ஓடி வந்தார்.

''இப்பப் பேசிக்கிட்டிருந்தோமே வள்ளி, அந்தச் சிறுமியின் அம்மா தான் இவங்க'' என்றார் நண்பர்.

"எருமை மாடுகளை மேய்க்கக் காட்டுக்குப் போனாருங்க. அங்கேயிருந்து அலறிட்டு வந்திருக்காரு...'' என்று அந்தப் பெண்மணி கதறி விளக்கினார்.

"நம்ம கத்தியை எடு. கூடவே ஒரு கயிறும்" என்றார் மாணிக்கம் சார்.

அந்தப் பெண் முன்னால் ஓட, பின்னாலேயே மாணிக்கம் சார், நண்பர், அவர் பின்னால் நான், இளைஞர்கள். வள்ளியின் வீட்டுக்கு முன்போய் நின்றோம்.



வள்ளியின் அப்பா பெரியகருப்பன் போட்ட அலறல் தெருவையே கிடு கிடுக்க வைத்தது. கொண்டு வந்த கத்தியால் வள்ளியின் அப்பா காலில் - ஒரு பகுதியில் + வடிவில் அறுத்து ரத்தத்தை வெளியேற்றி, காலுக்கு மேலே இறுகக் கட்டுப் போட்டார் மாணிக்கம் சார்.

''அனேகமாக உனது கருட்டை பாம்புக் கடியா இருக்கணும். இதுக்கு நம்ம கிட்டே மருந்து இல்லையே...?'' என்று கலங்கினார் மாணிக்கம் சார்.

"உடனே பூமிநாதபுரம் அரசு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனா நல்லது... எப்படி... எப்படிக் கொண்டு போறது?" என்று தவித்தார்.

கூட்டத்திலே ஒருவர் "வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிட்டுப் போகலாம்" என்றார்.

"போய்ச் சேர ரொம்ப நேரமாகுமே? அது வரைக்கும் தாங்க மாட்டாரே?" என்ற மாணிக்கம் ஐயா, "ஒரு கயத்துக்கட்டிலிலே படுக்க வச்சு, நாலு பேரு தூக்கிட்டு ஓடினா அனேகமாக ஒரு மணி நேரத்துக்குளே பூமிநாத புரம்."

மாணிக்கம் சார் சொல்லி முடிக்கும் முன்பே, அங்கே ஒரு கயிற்றுக் கட்டில் வந்தது. அதில் பெரிய கருப்பனைக் தூக்கிப் படுக்க வைத்து, ஒரு சேலையால் புரள விடாமல் கட்டினார்கள். ஒரு பழைய துணியால் அவர் வாயை அடைத்தார்கள்.

கட்டிலில் பெரிய கருப்பனைத் தூக்கிய வாறு ஓடினோம்.

"கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை" நினைவு வந்தது. பூமிநாதபுரம் எல்லைக்கு வந்து விட்டோம்.

மருத்துவமனை பூட்டிக் கிடந்தது. காவலர் ஒருவர், "ரெண்டு நாளா டாக்டர் லீவு" என்றார்.

வாயில் அடைத்த துணி எப்படியோ நழுவி விட, "ஐயோ...! அப்பா...!" என்று எரிச்சல் தாளாது அலறினார் பெரிய கருப்பன்.

"இப்பத்தான் இரண்டு நாளைக்கு முன் ஒரு டாக்டரம்மா புதுசா கிளினிக் தொடங்கியிருக் காங்க. அங்கே" என்று காவலர் சொன்னதை முழுசாகக் கேட்கவில்லை. கட்டிலைத் தூக்கிக் கொண்டு ஊர் மையப் பகுதிக்கு விரைந்தோம்; இல்லை பறந்தோம்!

அங்கே ஒரே நோயாளிகள் நெரிசல். கட்டிலை இறக்க நண்பர் கிளினிக்கிற்குள் எல் லாத் தடைகளையும் உடைத்துக் கொண்டு ஓடினார். அடுத்த ஐந்தாவது நிமிடம், என் அக்கா தோற்றத்தில் இருந்த டாக்டரம்மா வுடன் வெளியே வந்தார். இவரா டாக் டரம்மா!

டாக்டரம்மா மாணிக்கம் சாரைப் பார்த்து, "நீங்களா சார்?" என்று ஆனந்தக் கூச்சலிட் டார்.

"மத்ததெல்லாம் அப்புறம். முதல்லே இவரை எப்படியாவது காப்பாத்துங்க" என்றார் மாணிக்கம் சார்.

டாக்டரம்மா நர்சின் துணையோடு காலின் கடிவாய்ப் பகுதியைச் சுத்தம் பண்ணி ஓர் ஊசியும் போட்டார்.

"சரியான நேரத்திலே சரியான முதல் உதவி பண்ணியிருக்கிங்க" என்றார் டாக்டரம்மா.

கொஞ்ச நேரத்தில் பெரிய கருப்பனின் ஓலம் குறைந்தது.

டாக்டரம்மா, மாணிக்கம் சாரைப் பார்த்து, "நிஜமாவே என்னைத் தெரியலையா சார்?" என்று கேட்டார்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்த மாணிக்கம் சார், "நீங்க பனைக்குளத்துப்பட்டி பாக்கிய லட்சுமியில்லே?" என்று கேட்க, டாக்டரம்மா முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம்.

"அதே பாக்கியலட்சுமிதான் நான். உங்க மாணவி. அங்கே அஞ்சாவது படிச்சப்போ, என்னைத் தட்டிக் கொடுத்து மதுரையிலே சித்தப்பா வீட்டிலேயிருந்து படிக்க ஊக்கு விச்சிங்க. உதவித் தொகையிலேயே படிச்சு எம்.டி. முடிச்சுட்டேங்க. நீங்க இருக்கும் வில்லுப் பட்டிக்கு அருகிலேயே, கிளினிக்கை ஆரம்பிக்கனும்னு ரொம்பப் பாடுபட்டு இங்கே வந்திருக்கேன் சார். இந்த ஆஸ்பத்திரிக்கே 'மாணிக்கம் மருத்துவமனை'ன்னு உங்க பேரைத்தான் வச்சிருக்கேன்" என்றார் டாக்டரம்மா கண்கள் பணிக்க.

அப்போதுதான், மருத்துவமனையில் பெயரைக் கவனித்தேன்.

குழல் விளக்கின் அடியில், "மாணிக்கம் மருத்துவமனை" என்று பளபளத்தது பெயர்ப் பலகை.

"நம்ம பனைக்குளத்துப்பட்டியிலே படிச்ச வங்களில் உங்களைத் தவிர வேறே யாராச்சும் படிச்சு, மேல் நிலைக்கு வந்திருக்காங்களா?" என்று மாணிக்கம் சார் கேட்டார்.


"முதல்லே இந்த 'ங்க' போடறதை நிறுத் துங்க, சார்! டில்லிக்கு ராஜான்னாலும் பள்ளிக்

"எங்க அப்பாவுக்கு என் மேல் நம்பிக்கை ஜாஸ்தி!"

"எப்படிச் சொல்றே?"

"நான் பரிட்சையிலே பாஸ் ஆயிட்டா வைர மோதிரம் வாங்கித் தாரேன்னு சொல் றாரே!"

— செ. மலர்விழி



குப் பிள்ளைம்பாங்க. நான் என்ன படிச்சு எந்த நிலைக்கு வந்தாலும் இன்னும் உங்க மாணாக்கி தான்."

"சரி, நம்ம ஊரிலேருந்து வேறெயாரு படிச்சு மேல் நிலைக்கு வந்திருக்காங்க?"

"கோபாலுன்னு ஒருத்தர். நீங்க கூட கோ வாலு, கம் வாலுன்னு கேலி பண்ணுவீங்களே. அவரு இப்போ இஞ்சினியரா இருக்காரு. மகா லிங்கம் என்கிறவர் போலீஸிலே சர்க்கிள் இன்ஸ்பெக்டரா இருக்கிறாரு."

"மிக்க மகிழ்ச்சி" என்றார் மாணிக்கம் சார் நிறைவோடு.

டாக்டரம்மா கிளினிக்கின் உள்ளே, மற்ற நோயாளிகளைக் கவனிக்கப் போகுமுன் "வாத்தியார், வைத்தியர் இரண்டுமே தொழில் கள் இல்லே - தொண்டுகள்"ன்னு நீங்க சொன்னதை நான் மறக்கவே இல்லை சார்!" என்று சொல்லிட்டு "கொஞ்சம் இருங்க! உங்களுக் கெல்லாம் சாப்பாடு வரது" என்றும் நினை வூட்டி விட்டுப் போனார்.

பெரிய கருப்பனின் வலி பெருமளவு குறைந்திருக்க வேண்டும். எழுந்து உட்கார்ந்து, "டாக்டரம்மா பனைக்குளத்துப்பட்டியா? அது வும் உங்ககிட்டே படிச்சவங்களா?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டார்.

"நல்ல வேளை! அவங்க அப்பா 'நாளைக்கு கிடைக்கிற பலாப்பழத்தை விட இன்னைக்குக் கிடைக்கிற களாக்காயே மேல்'ன்னு இவங் களை எருமை மாடு மேய்க்க விரட்டாமே படிக்க அனுப்பியிருக்காரு. அதனால மக்க ளுக்குத் தொண்டாற்ற தொண்டுள்ளம் கொண்ட ஒரு டாக்டரம்மா கிடைச்சிருக் காங்க" என்றார் மாணிக்கம் சார்.

எல்லோருக்கும் சாப்பாடு வந்தது. சாப் பிட்டு விட்டு, அங்கேயே மொட்டை மாடியில் படுத்துக் கொண்டோம். காலையில் எல் லோரும் கிளம்ப ஆயத்தமான போது, "யாரும் நடந்து போக வேண்டாம். மில்லில் இருந்து ஜீப் வரும். மில் நிர்வாகத்தினர் உங்களுக்கு உதவி செய்வதை பாக்கியமா நினைக்கிறாங்க" என்றார் டாக்டர்.

ஜீப் வந்தது. பிரியா விடை பெற்றோம். ஆசிரமத்தை அடைந்தோம்.

"பெரிய கருப்பா, அந்த வாழையிலே போயி ஒரு குருத்தை அறுத்துட்டு வாங்க" என்றார் மாணிக்கம் சார்.

ஒரு கணம் நானே திகைத்தேன். என்னைவிட பெரிய கருப்பனும் திகைப்பு அடைந்திருக்க வேண்டும்.

"அது தலை வாழை, வாத்தியாரையா! குருத்தை அறுத்தா நறுங்கிப் போயிடும். பக்கக் கன்னுகளும் வராது" என்றார் பெரிய கறுப்பன் பதட்டத்தோடு.

"வாழையும் தென்னையும் எத்தனை ஆண்டு பலன் தரும்?"

"வாழை குலை தள்ளி கன்னுகளோட இரண்டு வருஷம் பலன் தரும். தென்னை ஐம்பது, நூறு வருடம் வரை பலன் தரும்."

"உனக்கு பூலோகக் கற்பக மரம் தெரியுமா?"


"தெரியாதுங்களே! தேவ லோகக் கற்பக மரத்தைத்தான் கேள்விப் பட்டிருக்கேன்!"

மாணிக்கம்சார் கண்களாலேயே என்னைப் பார்த்துப் பேசும்படி தூண்டினார்.

உற்சாகத்தோடு சொல்லத் தொடங்கினேன்.

"படிப்புங்கறது பூலோகக் கற்பக மரம். நாம் நினைக்கிறதை மட்டுமல்லாமல், நமக்குத் தேவையானதை எல்லாம் அது கொடுக்கும். வாழையாலே வர்றது இரண்டு வருஷப் பலன். தென்னையாலே வர்றது ரெண்டு தலைமுறைப் பலன்; ஆனால் படிப்பாலே கிடைக்கற பலன் ஏழேழு தலைமுறைக்கும் ஆனது!"

நான் சொல்லிக் கொண்டிருந்த போதே தந்தையைக் காண அங்கே வந்த சிறுமி வள்ளியை இழுத்துப் பிடித்துக் கொண்ட பெரியகருப்பன், "படிப்புங்கறது பூலோகக் கற்பகம், புரிஞ்சுகடுச்சுங்க. வள்ளி மாடு மேய்க்கப் போகமாட்டா. பள்ளிக் கூடத்துக்கு வருவா. படிச்சு நம்ம ஐயா பெயருக்குப் பெருமை தரும்படி வாழையைப்போல; தென்னையைப் போல பயன்படும்படி இருப்பாள்" என்றார் உறுதியுடன்.



"எதையோ புடிச்சுதான் உன் அப்பாகிட்டயிருந்து சைக்கிள் வாங்கினியாமே! என்ன புடிச்சே?"

"'அடம்' புடிச்சேன்!"

— பென்னை. சி. முருகன்



முட்டை போடுவார்

சிவா, ரவி, சுரேஷ், கார்த்திக் நால்வரும் நெருங்கிய நண்பர்கள். அறிவியல் தேர்வை முடித்து விட்டு வெளியில் வந்து தாங்கள் பதில் எழுதியதைப் பற்றி ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொண்டு சென்றனர்.

சுரேஷ் மட்டும் சோகமாக இருந்தான். இவ்வளவுக்கும் மற்ற மூவரையும் விட சுரேஷ்தான் நன்றாகப் படிக்கக்கூடியவன். "ஏண்டா சுரேஷ் சோகமாக இருக்கே?" என்று கேட்டான் ரவி. "அறிவியல் பரீட்சையை சரியா எழுதலேடா" என்றான் சுரேஷ் சோகமாக. "நீயே சரியா எழுதலேன்னா, நாங்க மட்டும் பிரமாதமாகவா செஞ்சிருப்போம்?" என்று மூவரும் ஆறுதல் கூறினர்.

"சரிடா. நேற்று சிவா வீட்டில் ஒன்றுசேர்ந்து படித்தோம். இன்று, கார்த்திக் வீட்டுக்குப் போகணும். சீக்கிரமா வந்துடுங்க. நாளைக்குக் கணக்குப் பரீட்சை" என்றான் ரவி.

நண்பர்கள் நால்வரும் கார்த்திக் வீட்டில் கூடி மாலை முழுவதும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர். சுரேஷ் மட்டும் வழக்கமான கலகலப்புடன் இல்லை. எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா இன்னுமா அதையே நினைச்சுட்டு இருக்கே? சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் இப்படி வருத்தப்படுறதே உன்னோட இயல்பாயிடுச்சு" என்றான் சிவா. "சரி வா. கணிதத் தேர்வையாவது நல்லா செய்ய வேண்டாமா?" என்றான் ரவி.

நண்பர்கள் எவ்வளவு முயன்றும் உசுப்பி விட்டும் சுரேஷைச் சிரிக்க வைக்க முடியவில்லை. அவன் கலகலப்பு எங்கோ போய் ஒளிந்து கொண்டது.

மௌனமாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். நண்பர்களின் பேச்சு 'கோழியில் இருந்து முட்டை வந்ததா; முட்டையில் இருந்து கோழி வந்ததா?' என்பதைப் பற்றி நடந்து கொண்டிருந்தது.

"டேய் எங்க வீட்ல நேத்து ரெண்டு கோழியும் முட்டை போட்டது" என்றான் ரவி. நேரம் போவதை உணர்ந்த சிவா, "உங்க வீட்டு கோழி முட்டை போட்டுச்சோ இல்லையோ, இப்ப இங்கே இருக்கும் நிலையைப் பார்த்தா, நாளைக்கு நம்ம கணக்கு வாத்தியார் நாலு முட்டை போட்டுருவாருடா" என்று கூறியவுடன் நண்பர்களுடன் சுரேஷ் விழுந்து விழுந்து சிரித்தான்.

— கே. தீபா, அயன்புரம்.

மைனா பேசுமா?


ரேவதி

ஆட்டோ நின்றதும் முதலில் இறங்கிக் குதித்துக் கொண்டே கம்பிக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்துப் பக்கம் ஓடினான் முத்து. பின்னாலேயே தேவானை ஓடி வந்தாள்.

மாமரத்தை நிமிர்ந்து பார்த்துக் காய்களை எண்ணினான் முத்து. நூற்றுக் கணக்கில் அரும்பு கட்டியிருந்த மல்லிகைப் பந்தலை வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் பார்த்தாள் தேவானை.

"வீட்டுக்குள்ளே கூட வராமல், ரெண்டு பேரும் தோட்டத்துப் பக்கம் ஓடிட்டாங்களே!" என்று வியந்தபடி சலித்துக் கொண்டாள் அம்மா.

"இருபது நாளா தோட்டத்தைப் பாக்காம இருந்திருக்காங்களே! பாக்கணும்னு தவிப்பும் ஆவலும் இருக்காதா என்ன?" என்று ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து விட்டுப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தார் அப்பா.



இருபது நாட்களுக்கு மேல் பூட்டப்பட்டிருந்த வீடு ஆதலால் ஒட்டடையும் தூசும் நிறைந்திருந்தன. அதோடு ஒரு மக்கல் நெடியும் வந்தது. காற்றோட்டம் இல்லாமல் இருந்திருக்கிறதே?

எல்லா அறைகளையும் திறந்து, ஜன்னல்களையும் திறந்து மின்விசிறியைப் போட்டார் அப்பா. ஸ்டோர் ரூமைத் திறந்த போது, தலைக்கு மேல் 'விர்'ரென்று குரு விகள் மாதிரி இரண்டு பறவைகள் பறந்து விரைந்தன. ஸ்டோர் ரூம் பரண்மேல் இருந்த முத்துவின் பூட்ஸ் அட்டைப் பெட்டிக்குள்ளிருந்து 'கிச்கிச்' சத்தம் கேட்டது. இரண்டு மைனாக்கள் பெட்டியின் விளிம்பில் உட்கார்ந்திருந்தன. ஒன்றின் அலகில் வெட்டுக்கிளி! இன்னொன்றின் அலகில் குட்டிக் கரப்பான் பூச்சி!

இரண்டும் பெட்டிக்குள் குனிந்து நிமிர்ந்தபோது, இரண்டின் அலகிலும் ஒன்றும் இல்லை. பெட்டிக்குள் இருக்கும் குஞ்சுகளுக்கு இரை கொடுத்திருக்கும் என்று எண்ணினார் அப்பா.

"இருக்கும் வேலையை எல்லாம் விட்டுட்டு அங்கே என்ன வேடிக்கை பார்த்துட்டு நிக்கறீங்க?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அம்மா. பேசாமல் இருக்கும்படி சைகை காட்டிவிட்டு, பரணைக் காட்டினார் அப்பா.

"ராட்போ...! ராட்போ...!"

"டுர்ரா... டுர்ரா....!"

தலையைச் சீவாத குறையாக இரண்டு மைனாக்களும் அவர்களை உரசிச் சென்றன.


"மைனா! முத்துவோட பூட்ஸ் பெட்டியில் குஞ்சு பொரிச்சிருக்கு!"

அம்மாவின் குரலைக் கேட்டு முத்துவும், தேவானையும் ஓடி வந்தனர்.

''என்னுடைய பூட்ஸ் பெட்டியில் குஞ்சு பொரிச்சிடுத்தே!"

"இருந்தா என்ன ஆயிடப் போகுது? பள்ளி திறக்க இன்னும் இருபத்தைந்து நாள் இருக்கே? அதுக்குள்ள இதுங்க இடத்தைக் காலி பண்ணிடும்," என்றாள் தேவானை.

அம்மா உள்ளே வேலையாகப் போய் விட்டாள். முத்துவும் தேவானையும் ஆளுக்கொரு நாற்காலி கொண்டு



வந்து போட்டு உட்கார்ந்து கொண்டனர். அப்பா ஒரு பெட்டியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

''நான் சின்னப் பையனா உங்களை மாதிரி இருக்கும்போது, கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக வெளியூர் போயிருந்தேன். திரும்பி வந்து பார்க்கும்போது என் புத்தகப் பைக்குள் மைனா குஞ்சு பொறித்திருந்தது. ஆறு குஞ்சுகள்! காப்பிப் பொடி வண்ணத்தில் உடம்பும், கறுப்புக் கழுத்தும், மஞ்சள் கால்களுமாகப் பார்க்க ரொம்ப அழகாக இருந்தது. பைக்குள் புத்தகம் நோட்டுகள் எல்லாம் இருந்தன. அப்பா அவைகளைத் தூக்கி வெளியே போட வந்தார். நான்தான் அழுது அடம்பிடித்துத் தடுத்தேன். அம்மா என் பக்கம் பேசினாள். குஞ்சுகள் தப்பின. ஆனால், புத்தகம் நோட்டு இல்லாம இருபது நாள் பள்ளிக்கூடம் போனேன். தண்டனையா தினமும் இம்போசிஷன் எழுதிட்டுப் போனேன்."

''அந்த மைனாக் குஞ்செல்லாம் பெரிசாகிப் பறந்து போச்சாப்பா? நீங்க எதையும் வளர்க்கலையா?'' என்று ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டான் தேவானை.

''பெரிசாகும் வரை மைனாக் குடும்பமே புத்தகப் பைக்குள்தான் இருந்தது. பெரிசாப் போனாலும் கூட அவை புத்தகப் பையை விடலே. கடைசியில், அவை எல்லாம் வெளியே போயிருக்கும் போது புத்தகப் பையை எடுத்துக் கொண்டு, சின்ன மூங்கில் பழக்கூடையை வைச்சிட்டேன்."

அப்பா பரண் மேலிருந்த பூட்ஸ் பெட்டியை எடுத்து நாற்காலியில் வைத்தார். பூட்ஸ்களுக்குள் இன்னும் பொரியாத முட்டைகள் இருந்தன. குஞ்சுகள் உள்ளே பதுங்கிக் கொண்டன!

வெளியே போயிருந்த இரண்டு மைனாக்களும் பறந்து வந்து கதவின் மேல் உட்கார்ந்து கொண்டன.

"கிக்கிக்கிக்...!"

''கொர்க் கொர்க் கொர்க்...!"

"லாடியா...! லாடியா...! லாடியா!"

அம்மா மைனாவும் அப்பா மைனாவும் தலையைச் சாய்த்து அவர்களைப் பார்த்து மிரட்டுவதைப் போல் கர்ணகடூர

மாகக் கத்தின.

"என்னப்பா இது! விதம்விதமாக் கத்துதே!"

"மைனாவுக்குன்னு தனிக் கத்தல் கிடையாதா?"

"ராடியோ ராடியோ"தான் இவைகளுக் கான பொதுக் கத்தல். ஆனால் இவை விதம்விதமாகக் கத்தும். சண்டை போட வருவது போலவும், பாடப் போவது போலவும் குரல் தரும். இந்தியாவின் வட மாநிலங்களில் மைனாவுக்கு சங்கித வித்வான்னே பட்டப் பெயர் இருக்கு!" என்றார் அப்பா.

"அப்போ இவை பாடுமா? பேசுமா?"

"பாடப் போற மாதிரி குரலைக் கனைத்து எல்லா முஸ்திபுகளையும் பண் ணும். ஆனா பாட வராது. ஆனாலும் கூட, பழக்கினால் இவைகளைப் பேச வைக்க முடியும். பேசுவதற்கு வசதியான நாக்கு அமைப்பு இவைகளுக்கு உண்டு. ஒருகாலத்தில் இவை பேசினவாம். மரபு மாற்ற வளர்ச்சி காரணமாக இவை பேசுந் திறமையை இழந்து விட்டன. ஆனால், இவைகளைக் குஞ்சுப் பருவத்திலேயே பிரித்து, பேசப் பயிற்சி தந்து வளர்த்தால் பேசும். இப்பவும் கூட இவை வேகமாகக் கத்தும்போது கேட்டால், பேசுவது போலவே இருக்கும்."

"அப்பா, நீங்க ஒரு மைனாக் குஞ்சை யாவது பிடித்துப் பேசவைக்கப் பழக்கி யிருக்கலாம்" - தேவானை.

"நான் செஞ்சு பார்த்தேனேம்மா. என் புத்தகப் பைல இருந்த குஞ்சுகளில் ஒன்றை மட்டும் எடுத்து என் சித்தப்பா வீட்டுல வைச்சு வளர்த்தேன். கூண்டுல அடைக் கலே. அது பறந்து வந்து என் உள்ளங் கையில் உட்கார்ந்து தானியங்களைக் கொத்தும். நான் குரல் தந்தால், உடனே பறந்து வந்து என் தோளில் உட்காரும். கடைக்குக் கூட என்னுடன் தோளில் உட்கார்ந்து வரும்."

"என்ன பேசும் அது?"

"யாராவது வந்தால், "வாங்க, நலமா"ன்னு கேட்கும். கூண்டுல அடைக் காம சுதந்தரமா வளர்த்தேன்."

"அப்பா, மைனா நம் நாட்டுப் பறவை தானே?"

"எல்லா நாடுகளிலும்



அறிவியல் உண்மைகள்

❖ சங்க இலக்கியங்கள் புகழ்ந்து கூறும் 'நாகணவாய்ப்புள்'தான் மைனா. விலங்கியல் பெயர் ACRIDOTHERES TRISTIS TRISTIS (LINNAEUS)

❖ சிறிய புறா அளவுக்கு இருக்கும். தலை, கழுத்து, மார்பு பளபளக்கும் கறுப்பு. மற்ற பகுதிகள் காப்பிப் பொடி வண்ணம்; இறக்கைகளில் வெள்ளை வட்டம். கண்களைச் சுற்றி மஞ்சள்.

❖ உணவு புழு, பூச்சி, தானியம், கழிவுப் பொருள்கள், பழங்கள், குறிப்பாக அத்திப்பழம்.

❖ எங்கும் கூடு கட்டும். காகிதக் குப்பை, கூளம், வேர், குச்சிகள் என்று எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும்.

❖ பசுமை கலந்த பளபள முட்டைகள். 4 முதல் 5 வரை. ஒரே ஆண்டில் இரண்டு முறை கூட முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.

❖ மைனாவின் நாக்கு அமைப்பு, பழக்கினால் பேசக்கூடியதே. பழக்கினால், இவை நாம் கூறுவதைப் புரிந்து நடக்கும். ஒரு காலத்தில் மைனாக்கள் நன்கு பேசியிருக்கக் கூடும். வால் இழந்த மனித இனத்தைப் போல இவையும் பேசும் திறனை இழந்து விட்டன. கதைகளில் வரும் அரசகுமாரிகள் மைனாக்களுடன் பேசி, ஆடி, விளையாடிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கக்கூடியவைகளே!

❖ மைனாக்களில் எத்தனையோ வகை உண்டு. உம். கருஞ்சாம்பல் தலை மைனா (GREY-HEADED MYNA), பனைத் மைனா (PLYTHI'S MYNA), கருந்தலை மைனா (BLACK HEADED MYNA), ரோசாபிஞ்சு (ROSY PASTOR), சாதாரண மைனா (COMMON MYNA), காட்டு மைனா (JUNGLE MYNA), பெரியகாட்டு மைனா (SOUTHERN GRACKLE MYNA). சாதாரண மைனாதான் நாகணவாய் புள். காட்டு மைனா என்ற பிராமணி மைனா சுத்த சைவம். இனிமையாகப் பாடவல்லது!

❖ மைனாக்கள் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் ஏராளமான பூச்சிகளை உணவாக்கிக் கொண்டு விவசாயிகளுக்கு நண்பனாகவும், பயிர்களுக்கு தானே சேதத்தை உண்டுபண்ணி விவசாயிகளுக்குப் பகைவனாகவும் விளங்குகிறது.

❖ மைனா துணிவுக்குப் பெயர் போனது.

பரவி இருக்கும் பறவைம்மா மைனா. நமது சங்க இலக்கியங்கள் கூட இதைப் பற்றிப் பேசுகின்றன. நாகணவாய் புள் என்று அவை இந்த மைனாவைக் குறிப்பிடுகின்றன."

"அப்பா, நீங்கள் வளர்த்த மைனா என்னாச்சு?"

அப்பாவின் கண்கள் கலங்கின. "மைனாக்களுக்கு எளிதில் தொற்று நோய் வந்து விடும். அதுவும் அவைகளின் நாக்கில் ஒருவகைப் புண் வரும். அது வந்து விட்டால் மைனா அவ்வளவுதான். என் மைனாவையும் அந்த நாக்குப் புண் நோயின் தாக்குதல்தான் பலிவாங்கியது" – எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் தன்னை விட்டுப் பிரிந்த அன்பு மைனாவின் பிரிவை எண்ணி அப்பா கலங்கினார்!

முத்துவும் தேவானையும் அப்பாவின் கண்ணீரைத் துடைத்தனர்.




ஈட்டிமுடியார் சாபம்!

இதுவரை நடந்தது

ரமணியும், பொன்முடியும் உயிர் நண்பர்கள். சென்னையில் விடுதியில் தங்கிப் படித்து வந்தார்கள். ரமணியின் தந்தை கல்கத்தாவில் பிரபல வங்கி ஒன்றின் மேலாளர். அடிக்கடி மாற்றலாகும் பணி என்பதால் படிப்புக் கெடாமல் இருக்க சென்னையில் படித்து வந்தான். பொன்முடியின் தந்தை ஏலகிரி மலையில் பெரிய எஸ்டேட் முதலாளி. அவரது ஐம்பதாவது பிறந்த நாளில் கலந்து கொள்ள ரமணியையும் அழைத்து வருகிறான் பொன்முடி. வரும் வழியில் பாறை சரிந்து விட்டதால் சுற்றிக் கொண்டு வந்து அவர்கள் மேல் கேம்புக்கு வந்து சேரும் போது இரவு பன்னிரண்டு மணியாகி விடுகிறது. பொன்முடியின் தந்தையும் அண்ணனும் வரவேற்கிறார்கள். தனக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓட்டல் அறையில் ரமணி தங்குகிறான். காலையில் பார்த்தபோது பொன்முடியின் தந்தைக்குப் பரிசளிக்க அவன் கொண்டு வந்திருந்த புத்தம்புது விலைமிக்க சிட்டிசன் கைக்கடிகாரம் காணவில்லை என்பதை அறிகிறான். போலீசுக்குப் புகார் தர அவன் முயன்றபோது பொன்முடி தடுத்து விடுகிறான். அவன் தன் தந்தையின் விருந்தாளி என்பதால், அவருடைய அனுமதி இன்றிப் போலீசில் புகார் செய்யக்கூடாது என்று தடுக்கிறான். பொன்முடியின் தந்தையிடம் விஷயத்தை விளக்குகிறான் ரமணி. கண்கண்ட தெய்வமாகத் தான் வணங்கும் ஈட்டிமுடியார் என்ற சாமியாரிடம் அனுமதி கேட்க வேண்டும் என்கிறார் அவர். அன்று மாலை எல்லோரும் ஈட்டிமுடியாரிடம் போகிறார்கள். அவர், பள்ளம் தோண்டி அதில் படுத்துக் கொண்டு தியான சமாதியில் மூடிக் கொள்கிறார். தியான சமாதி கலைந்து வெளியே வந்ததும் வாட்ச் தொலைந்து போனதைப் பற்றி அவரிடம் குறிப்பிடுகிறார்கள். இரண்டு நாள் கழித்து வந்து பார்க்கும்படியும், ஞானதிருஷ்டியில் வாட்ச் இருக்கும் இடத்தைப் பார்த்துக் கூறுவதாகவும் ஈட்டிமுடியார் கூறுகிறார். வேறுவழியில்லாமல் ரமணி மேலும் இரண்டு நாட்கள் தங்கும்படி நேர்கிறது. அன்று காலை ஜாகிங் செல்லும்போது, தொழிலாளர் காலனி குப்பைத் தொட்டியில், காணாமல் போன வாட்ச் வைக்கப்பட்டிருந்த அழகிய பெட்டி கிடைக்கிறது. அதை குப்பை பெருக்கும் சிறுமியிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டு ஓட்டல் அறைக்குத் திரும்புகிறான் ரமணி. அந்தப் பெட்டியின் மேல் ஒட்டப்பட்டிருந்த ஐ.நா. பொன்விழா தபால் தலை மட்டும் பிய்க்கப்பட்டிருக்கிறது. தன்னிடம் உள்ள அயல்நாட்டு தபால்தலை உறைகளை மேசை மேல் போட்டு வைத்து, கண்காணித்து, பெருக்கும் சிறுமி பொன்னாத்தாவின் அண்ணன் சிவபுரியின் ஆல்பத்தை வரவழைத்துப் பார்க்கிறான். பிய்க்கப்பட்ட ஐ.நா. பொன்விழா தபால் தலை அதில் இருக்கின்றது! மேலே படியுங்கள்.

சின்னபாபு

திக்...! திக்...! திக்... கதைகள்!
பயமின்றிப் படியுங்கள்!



அறைக் கதவை மூடித் தாளிட்டு விட்டு ஒரு நாவலைக் கையிலெடுத்தான் ரமணி. திடீரென்று கதவு திறந்தது! தட்டில் காப்பி பலகாரம் கொண்டு வந்தான் ஓட்டல் பணியாள்.

"கதவை உள்பக்கம் தாளிட்டிருந்தேனே! எப்படித் திறக்க முடிந்தது?" என்று உண்மையான வியப்புடன் கேட்டான் ரமணி.

"நீங்கள் நடுத்தாளை மட்டும்தான் போட்டிருந்தீர்கள். வெளியேயிருந்து தள்ளினால் திறந்து கொண்டு விடும். மேல், கீழ்த் தாழ்ப்பாளையும் போட்டால்தான், வெளியேயிருந்து திறக்க முடியாது" என்று சிரித்தான் பணியாள்.

வாட்ச் தொலைந்து போன அன்று, பயண அலுப்பில் நடுத்தாளை மட்டும் போட்டு விட்டுப் படுத்தது ரமணியின் நினைவுக்கு வந்தது. வாட்ச் திருடன் எப்படி உள்ளே வந்திருக்கக் கூடும் என்பதும் புரிந்து விட்டது!

"தம்பி ரமணி... ரமணி" என்று பொன்முடியின் அப்பா அழைத்துக் கொண்டே வரும் சத்தம் கேட்டது.

"தம்பி, உங்க சித்தப்பாவாம். உன்னைப் பார்க்க வந்திருக்கார்" என்று ரமணியின் சித்தாப்பாவையும் அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார் பொன்முடியின் தந்தை.

"அடுத்த வாரம் ஜெர்மெனி போறேன். மூன்று வருஷம் திரும்பி வர முடியாது. அதுதான் உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னு சென்னைக்கு ஹாஸ்டலுக்குப் போனேன். இங்கே வந்திருக்கும் தகவல் கிடைச்சது. நேராக் கிளம்பி வந்துட்டேன்" என்று பாசம் பொங்கச் சிரித்தார் சித்தப்பா.


சித்தப்பாவுக்குக் குழந்தைகள் இல்லை. அதனால் ரமணியிடம் அளவிட முடியாத பாசம்.

"எங்க சித்தப்பா; பம்பாயில் இருக்கிறார். பெரிய விஞ்ஞானி. சமீபத்தில் பம்பாயில் ஏற்பட்ட வெடி விபத்தில் இடிபாடுகளுக்கு இடையே இரண்டு நாள் உயிரோடு இருந்து தப்பிப் பிழைத்தவர்," என்று பொன்முடியின் தந்தைக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தான் ரமணி.

"அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. ஆமாம், வெடி விபத்தில் நீங்க மட்டும் ரெண்டு நாள் எப்படி உயிருடன் இருக்க முடிஞ்சது?" என்று பெரு வியப்புடன் கேட்டார் பொன்முடியின் தந்தை.

"இது பெரிய அதிசயமே இல்லைங்க. விஷக்காத்து விஷ வாயு இல்லாத ஓர் அறையில், நூறு சதுர அடிக்குள் உள்ள காத்தில் உள்ள ஆக்ஸிஜன், நாம்ப நான்கு மணி நேரம் உயிரு

டன் இருக்கப் போதுமானதுங்க. வெடிவிபத்து ஏற்பட்டப்போ நான் குளிச்சுக்கிட்டிருந்தேன். மேல்தளமெல்லாம் பிளந்து அப்படியே கீழே இறங்கிடுச்சு. சரிஞ்ச கூடாரம் மாதிரியான இடத்தில் நான் சிக்கிக்கிட்டேன். அறைக்குள் உள்ள காற்றின் ஆக்ஸிஜன், இன்னும் இரண்டு நாட்களுக்கு என்னை உயிருடன் வைக்கும் என்பதைப் புரிஞ்சுக்கிட்டு, மேலும் கட்டடம் சரிஞ்சு விழாம இருக்க கடவுளைப் பிரார்த்தனை பண்ணினேன். அவ்வளவுதான்'' என்று சிரித்தார் சித்தப்பா.



பொன்முடியின் அப்பாவின் முகத்தில் ஏதோ தீவிரம்! ரமணிக்கும் தான்!

"என்ன தம்பி இது! என்னவோ பரிசுப் பொருள் பாக்கெட் மாதிரி இருக்கு? அழகான சாட்டின் ரிப்பன் போட்டுக் கட்டி வைச்சிருக்கு?" என்று மேஜை மீதிருந்த ஆல்பத்தைக் காட்டிக் கேட்டார் பொன்முடியின் அப்பா.

தன் கண்டுபிடிப்பைக் கூறிவிடலாமா என்று ஒருகணம் எண்ணிய ரமணி, உடனேயே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

''இங்கே அறை பெருக்கும் சிறுமி பொன்னாத்தாவின் அண்ணன் சிவபுரி, தபால்தலை சேகரிப்பவன். எனக்கும் அந்தப் பைத்தியம் உண்டு. அதான் அவனுடைய ஆல்பத்தைக் கொண்டு வரச் சொல்லிப் பார்த்தேன். ஆல்பத்தின் தையல் பிரிந்து விட்டது. அதுதான் இந்த இனிப்பைக் கட்டி வந்த சாட்டின் நாடாவைத் தந்தேன்'' என்று விளக்கினான் ரமணி.

"அட, நாடாவில் இனிப்புக் கடை பெயர் கூடப் போட



"இன்னைக்கு எல்லா மிஸ்கிட்டேயும் குட் வாங்கினேன் பாட்டி."

"எல்லார்கிட்டேயும் குட்டு வாங்கற அளவுக்கு ஏன்டா கண்ணா நடந்துக்கிறே?"

- சீர்காழி. வி. ரேவதி

டிருக்கே!" என்று அதிசயித்த பொன்முடியின் தந்தை, "தம்பி, பொன்னாத்தாவின் தந்தை வடமலையான் கூட ஈட்டிமுடியாரிடம்தான் வேலை பார்க்கிறான். அவர் தீயில் விழச் சொன்னால் உடனே விழுவான். அத்தனை பக்தி அவரிடம்," என்றார்.

சித்தப்பாவுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பிய அவர், போகும்போது, "ஐயா, எதேச்சையா இன்னிக்கு வந்திருக்கீங்க. நீங்களும் விழாவில் கலந்து கொள்ளணும். அப்பத்தான் எனக்குப் பெருமையா இருக்கும்" என்று சித்தப்பாவிடம் கூறிவிட்டு, "தம்பி ரமணி, சித்தப்பாவை நல்லா கவனிச்சுக்க வேண்டியது உன் பொறுப்பு" என்று விடைபெற்றார்.

"சித்தப்பா, ஒரு முழுத் தேங்காயை, தரையில அடிக்காமல் உடைக்க முடியுமா?" என்று கேட்டான் ரமணி.

"என்னடா இது! ராத்திரி முழுக்கத் தூக்கம் முழிச்சு வந்திருக்கானே... காப்பி குடிச்சியான்னு கேட்பேன்னு பார்த்தால் என்னவோ கேள்வி கேட்கிறியே?" என்று சலித்துக் கொண்ட சித்தப்பா, "சும்மா வேடிக்கைக்குக் கேட்டேன். நீ இந்த மாதிரி சந்தேகம் கேட்டதே எனக்கு காப்பி டிபன் சாப்பிட்ட மாதிரித்தான்" என்று சிரித்தார்.

"ரமணி, சோடியம்னு ஒரு வேதிப் பொருள். ரசாயன பரிசோதனை சாலையில் கவனமா நாமே முயன்றும் தயாரிக்கலாம். வெள்ளி மாதிரி இருக்கும். ஆபத்தானது. தண்ணீர் பட்டால் வெடிக்கும். இதைத் தேங்காயின் குடுமிக்குள் வைத்து தண்ணீர் தெளித்தால் தேங்காய் வெடித்துச் சிதறும்."

சித்தப்பா முடிக்கவும், அறை வாயிலில் நிழலாடியது.

"மேல்துண்டை வைச்சிட்டுப் போயிட்டேன் தம்பி. அதை எடுக்கத்தான் வந்தேன்" என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்து துண்டை எடுத்துக் கொண்டு போனார் பொன்முடியின் அப்பா.

அன்று மாலை விழா நன்றாக நடந்தது. விழாவுக்கு எதிர்பாராத சிறப்பு விருந்தினராக ஈட்டிமுடியாரும் வந்திருந்தார். விழா முடிந்த கையோடு சித்தப்பா புறப்பட்டு விட்டார். ரமணி, வாட்ச் தொலைந்து போனதையோ, ஈட்டிமுடியாரைச் சந்தித்ததையோ, தன் கண்டு பிடிப்புகளையோ அவரிடம் கூறவில்லை. மறுநாள் காலையில் பொன்முடியின் தந்தையே அவனைத் தேடிக் கொண்டு வந்து விட்டார். அவசரம் அவசரமாகக் குளித்து விட்டு அவருடன் கிளம்பினான் ரமணி.

ஈட்டிமுடியார் பனை ஓலைக் கொட்டகையில், கயிற்றுக் கட்டிலில் சீடர்கள் சூழ அமர்ந்திருந்தார். அந்த நேரத்தில் கூட, பிரச்னைகளுடன் மக்கள் கூட்டம்! தாம்பூலத் தட்டை காணிக்கையுடன் வைத்து, இருவரும் பணிந்தனர். என்ன காரணமோ தெரியவில்லை, ரமணியின் மனத்தில் பழைய நெகிழ்வு ஏற்படவில்லை!

"ஐயா, தம்பி தொலைச்ச வாட்ச் பற்றி ஏதாவது தெரிஞ்சதுங்களா?" - பயபக்தியுடன் வாய் பொத்திக் கேட்டார் பொன்முடியின் தந்தை.

"தெளிவா சொல்ல முடியலே. சில தோற்றங்கள்தான் வந்தது. பெரிய தண்ணீர்த் தொட்டி. அதுல ஒரு இரும்புக் குழாய்ல தண்ணி கொட்டுது. இன்னொரு குழாய்ல தண்ணி வெளியே போகுது. அந்தத் தொட்டிக்குள்ள தம்பியோட வாட்ச் கிடக்கு" என்று கண்களை மூடி மிகவும் நிதானமாக, ஒவ்வொரு வார்த்தையாகத் திருவாய் மலர்ந்தருளினார்

ஈட்டிமுடியார்.

"ஐயா, நீங்க சொல்றதைப் பார்த்தா ஓவர் ஹெட் டேங்க் என்கிற மேல்நிலைத் தொட்டியா தோன்றுது. அது மாதிரித் தொட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருக்குங்களே! வாட்ச் உள்ள தொட்டியை எப்படிக் கண்டுபிடிப்பது? ஒவ்வொருத்தர் வீட்டுத் தொட்டியையும் சோதிச்சுப் பார்க்கிறது என்பது முடியாத காரியமா தெரியுதுங்களே!'' என்று குழைந்தார் பொன்முடியின் தந்தை.

ஈட்டிமுடியார் மறுபடி கண்களை மூடிக் கொண்டார்.

"அந்தத் தொட்டியில் ஒரு கிளி படம் வரைஞ்சிருக்கு. அதுக்கு மேல் எதுவும் தெரியலே. புத்திசாலித்தனமா தேடிக் கண்டுபிடிச்சு எடுத்துக்குங்க. போலீஸ் கிலீஸ் எல்லாம் தேவை இல்லை!"

ஈட்டிமுடியார் எழுந்து உள்ளே சென்று விட்டார். இருவரும் யோசனையுடன் திரும்பினர்.

ஊரில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளைக் கண்டு வர உடனே ஆட்கள் கிளம்பினர். எதிலுமே கிளி படம் போடவில்லை என்று அவர்கள் திரும்பியபோது, பொறுமை இழந்த ரமணி, தனது கண்டுபிடிப்புகளை விளக்கி போலீசுக்குப் புகார் பண்ணி விடலாமா என்று துடித்தான்.

அதற்குள் பொன்முடி குதித்தான் மகிழ்ச்சியுடன். "அப்பா, இந்த ஓட்டலில் உள்ள மேல்நிலைத் தொட்டியின் மறு பக்கம், கலைந்து போன சலவை சோப் விளம்பரம் இருக்கு. அது கிளி சோப் விளம்பரம். அதில் கிளி பொம்மை போட்டிருக்கு!"

பணியாட்கள் இரும்பு ஏணியில் ஏறி, தண்ணீர்த் தொட்டியில் தேடினார்கள். கயிறால் நன்கு மடித்துக் கட்டப்பட்ட தண்ணீர் புகாத ஒரு கனத்த பிளாஸ்டிக் கவர் கிடைத்தது. அதற்குள் அந்தப் பொல்லாத சிடிசன் வாட்ச்! அந்த பிளாஸ்டிக் கவரைக் கட்டப் பயன்படுத்தப்பட்டிருந்த கனத்த கயிறு ஒரு வண்ண பளபள சாட்டின் நாடா! அதில் இனிப்பு தயாரித்த சென்னைக் கடையின் பெயர் அச்சிடப்பட்டிருந்தது!

நாடாவைப் பிரித்து, அதில் இருந்த பெயரைப் படித்த பொன்முடியின் தந்தையின் முகம் கனத்தது. ரமணியைப் பார்த்தார்.

"தம்பி, எனக்குப் புரிஞ்சுப் போச்சு! உனக்குப் புரிஞ்சுதா?"

"நல்லாவே புரிஞ்சுப் போச்சுங்க'' என்றான் ரமணி.

"வண்டியை எடுக்கச் சொல்லுறேன். என்னோடு கிளம்பு."

"எங்கே ஐயா?!"

"போலீஸ் ஸ்டேஷனுக்கு. புகார் கொடுக்க தம்பி"

ரமணி அதிர்ந்தான்.

"ஐயா! ஈட்டிமுடியாரை மீறி போலீசுக்குப் புகார் பண்ணினால் அவர் சாபத்துக்கு ஆளாகி விடுவோம்னு சொல்வீங்களே?"

பொன்முடியின் தந்தை பதில் அளிக்கவில்லை. அவருடைய தலை குனிந்திருந்தது. புதிய விடியலை நோக்கி இருவரும் கிளம்பினர்.


(முற்றும்)

"நான் நீச்சல் போட்டியில கலந்துக்கறதா சொன்னதும் எங்க அப்பா ஒப்புக்கிட்டார்."

"எப்படிடா?"

"அந்த சாக்குலயாவது நீ குளிச்சா சரின்னு சொல்லிட்டாரு."

— பா. ஜெயக்குமார்



ஈற்று வாக்கியக் கதைப்

போட்டியில் பரிசு பெற்ற கதை

குறட்டை சத்தம்



மகத நாட்டை ஆண்டு வந்த மன்னனுக்கு குறட்டைச் சத்தம் என்றாலே அலர்ஜி. நாட்டில் இனி யாரும் குறட்டை விடக்கூடாது எனக் கட்டளையிட்டான். இக்கட்டளையை மீறுபவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்ற உத்தரவை நாடு முழுவதும் பரப்பினான்.

மன்னனின் கட்டளையைக் கேட்ட அரசி மிகவும் வருந்தினாள். அதற்குக் காரணமும் இருந்தது. அரசிக்கும் குறட்டைப் பழக்கம்! அதனால், இனமும் மன்னன் தூங்கிய பிறகு தூங்கி, அவருக்கு முன்பாக எழுந்து விடுவாள்!

மகதநாட்டில் திருடர் பயம் அதிகமிருந்தது. அதனால் மன்னன் மாறுவேடத்தில் நகர சோதனை செய்ய முடிவு செய்தான்.

நள்ளிரவு. மாறுவேடம் போட்டுக் கொண்டு மன்னன் அரசியிடம் விடை பெற்றுப் போக வந்தான். அப்போது பயங்கரமான குறட்டைச் சத்தம் கேட்டது. எல்லாம் அரசியாரின் குறட்டைதான்! என் அரண்மனையிலேயே குறட்டையா? யார் இவ்வளவு துணிச்சலாகக் குறட்டை விடுகிறார்கள் என்று மன்னன் உற்றுப் பார்த்தான். குறட்டை விடுவது அரசியேதான் என்பதை அறிந்த மன்னன் ஒரேயடியாகக் கோபமுற்றான். 'நாளை காலை உனக்குத் தண்டனை அளிக்கிறேன்', என்று கூறிவிட் டுச் சென்றான்.

நகர சோதனை முடிந்தது. மன்னனுக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டது. அருகில் இருந்த கோயிலில் படுத்துத் தன்னையறியாது உறங்கி விட்டான். படுத்த சில நிமிடங்களில் பயங்கரமான குறட்டைச் சத்தம் மன்னனிடமிருந்து வந்தது!

தன் மேல் ஒருவன் ஓடிவந்து விழ, மன்னன் திடுக்கிட்டு விழித்தான். "யார் நீ? எதற்காக இப்படி ஓடிவந்து விழுந்தாய்?" என்று அவனைப் பிடித்துக் கொண்டு கேட்டான் மன்னன். பயத்தோடு அவன், "நான் ஒரு திருடன். எங்கள் கூட்டம் கோயிலின் பின்னால் இருக்கிறது. திடீரென புலி உறுமுவது போன்ற சத்தம் கேட்டது. நான் மட்டும் தப்பித்துக் கொள்ளலாம் என ஓடி வந்தேன்" என்றான் அவன்.

"புலியா! அப்படி எதுவும் தெரியவில்லையே?" என்று சுற்றும் முற்றும் பார்த்தான் மன்னன். மறைவிடத்தில் இருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அரசி மன்னனை நோக்கி வந்தாள்.

"அரசே! இங்கு புலி வரவில்லை. தங்களின் குறட்டை சத்தம்தான் புலியின் உறுமலைப் போன்று கேட்டது!" என்றாள் அரசி.

மன்னனுக்கு திருடனைப் பிடித்த சந்தோஷம்! அரசிக்கு தண்டனையில் இருந்து தப்பிய மகிழ்ச்சி. இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

— து. கிருஷ்ணராஜ், கடலூர்.


◆ ஓவியராக வேண்டும் என்ற இலட்சியமும், திறமையும் கொண்ட சிறுமி சித்ரா!
◆ தன் பெண் பொறியாளராகவோ, டாக்டராகவோ ஆக வேண்டும் என்று கனவு காணும் பெற்றோர்!
◆ இவர்களிடையே நடைபெறும் போருக்கு 9 ஆவது வீட்டில் முடிவு ஏற்படுகிறது. அது என்ன முடிவு? முடிவில்தானே தெரியும்? விறுவிறுப்பான புதுமைத் தொடர் கதை.
வெ. நல்லதம்பி எழுதும்
ஒன்பதாம் வீடு!
● செப்டெம்பர் கோகுலம் இதழில் தொடங்குகிறது. உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டிடம் இப்பொழுதே சொல்லி வையுங்கள்!

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

லட்டை எப்படிச் சாப்பிடுவது?

வீரராஜபுரத்தை மன்னர் வீரபத்திர ராஜன் ஆண்டு வந்தார். மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

மன்னருக்கு நகைச்சுவை உணர்வு அதிகம். எப்போதும் தானும் மகிழ்ச்சியாக இருப்பார். மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பார்.


அரசவை கூடியது. மந்திரி எழுந்தார். "மன்னா, தங்கள் பிறந்த நாளை முன்னிட்டு மக்கள் அனை வரும் தங்களை நேரில் கண்டு வாழ்த்த விரும்புகிறார்கள்" என்றார்.

"அப்படியா! நானும் மக்களைச் சந்திக்க விரும்பினேன்" என்றார் மன்னர்.

"அரசே, பிறந்த நாளன்று தங்களை வாழ்த்த வரும் மக்களுக்குச் சிற்றுண்டி அளித்து அனுப்பி வைக்க வேண்டுமென்பது என் விருப்பம்" என்றார் மந்திரி.

இதை மற்றவர்களும் ஆமோதிக்க, மன்னர் சம்மதம் தெரிவித்தார்.

பிறந்த நாளன்று மைதானத்தில் மக்கள் அனைவரும் கூடினர். அவர்கள், மன்னரை வாழ்த்திய கோஷம் விண்ணைப் பிளந்தது. மக்கள் அனைவருக்கும் பந்தி பரிமாறப்பட்டது. ஒவ்வொருவர் இலையிலும் இரண்டு லட்டுகள் வைக்கப்பட்டன. மேடையில் மன்னர் அமர்ந்ததும் மக்களும் அமர்ந்தனர்.



சாப்பிடப் போகும் நேரத்தில் தண்டோரா போடுபவன் வந்து கணீரென்ற குரலில் ஒரு அறிவிப்பை வெளியிட்டான்.

"தன் பிறந்த நாளை முன்னிட்டு மக்களுக்கு மன்னர் போட்டி ஒன்றை அறிவித்துள்ளார். உங்கள் இலையில் உள்ள இரண்டு லட்டையும் நீங்கள் சாப்பிடக் கூடாது; மறைக்கவும் கூடாது; தண்ணீரில் கரைக்கவும் கூடாது. ஆனால் இலையில் லட்டு இருக்கவும் கூடாது. போட்டியில் வெல்பவர்களுக்கு மன்னர் பரிசு வழங்குவார்."


லட்டை தின்னாமல், மறைக்காமல், கரைக்காமல் எப்படி மறைய வைக்க முடியும் என்று எல்லோரும் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டனர். யாருக்கும் எந்த ஒரு யோசனையும் தோன்றவில்லை. யாரும் அதைச் செய்து காட்டக்கூட முன்வரவில்லை.

கடைசியில் வீரபாகு என்ற ஒரு சிறுவன் எழுந்தான். தன் இலையில் இருந்த லட்டைத் தனக்கு இடது பக்கத்தில் இருந்த பெரியவருக்கு ஊட்டினான். அவரும் வீரபாகுவின் புத்திசாலித்தனத்தை உணர்ந்து தன் இலையில் இருந்த லட்டை வீரபாகுவுக்கு ஊட்டினார். சிறுவன் வீரபாகுவுக்குப் பரிசு கிடைத்தது என்பதைக் கூறவா வேண்டும்? மக்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

— மூ. சுகந்தி, தூத்துக்குடி.


ஆமைகள்

ஆழி




o ஆமைகள் சுமார் 2 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகின்றன. முதலை, பாம்பு, பல்லி போன்று ஊர்வன வகையைச் சேர்ந்ததே ஆமை. ஆமைகளில் சுமார் 275 வகைகள் உலகில் இருக்கின்றன. இவற்றில் சுமார் 31 வகைகள் இந்தியாவில் உள்ளன.

o ஆமைகளில், நிலத்தில் வாழும் ஆமை, நீரில் வாழும் ஆமை என இரு பிரிவுகள் உள்ளன.



← நிலத்தில் வாழும் ஆமைக்குக் கால்கள், நிலத்தில் நடப்பதற்கு ஏற்ப நகங்களுடன் அமைந்திருக்கின்றன. ஆமை, தரையில் நடக்கும் வேகம் மணிக்குச் சுமார் 70 மீட்டர்கள். இந்த ஆமையின் இரை: பூச்சிப் புழுக்கள், சிறிய மீன்கள்.


o நீரில் வாழும் ஆமைகள், கடல் நீரில் வாழும் ஆமைகள் என்றும், குளம், குட்டை போன்ற நன்னீரில் வாழும் ஆமைகள் என்றும் பிரிக்கப்படும். நீரில் வாழும் ஆமைகளுக்கு, கால்கள் நீந்துவதற்கு வசதியாகத் துடுப்பு போன்று அமைந்திருக்கும். இந்த ஆமைகளின் இரை, கடலில் உள்ள சிறிய உயிரினங்கள்.






← மென் ஓட்டுக் கடல் ஆமை (தோல் ஆமை) மிக வேகமாக நீந்தக்கூடியது. அது நீந்தும் வேகம் மணிக்குச் சுமார் 32 கி.மீ! இது தான் உலகில் மிக நீளமான (2.20 மீ.) ஆமை.

o ஆமையின் ஓடு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இரு பகுதிகளும் பக்கவாட்டில் இணைக்கப் பட்டிருக்கும். ஆபத்து வரும்போது, ஆமை, தன் தலை, கால்கள், வால் முதலியவற்றைத் தன் ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். சில ஆமைகள், தலையைச் செங்குத்தாக உள்ளே இழுத்துக் கொள்ளும், சில பக்கவாட்டில் இழுத்துக் கொள்ளும்.






○ ஆமைக்கு மூக்குத் துளை ஒன்றுதான். மற்ற உயிரினங்கள் போல் அல்லாமல், ஆமையின் விலா எலும்புகள் அசையாமல் நிலையாக இருப்பவை. அதனால், அதன் வயிற்றில் உள்ள தசைகள் நுரையீரல்களை அழுத்தவும், விரிக்கவும் உதவுகின்றன.


○ ஆமையின் ஓடு, அதன் முதுகெலும்புடன் ஒட்டியிருக்கும். ஆமை வளர வளர அதன் ஓடும் வளரும். ஆமை வளரும் போது பழைய ஓட்டின் அடியில் புதிய ஓட்டின் படிமம் உருவாகும். ஆமையின் ஓடு உடைந்துபோனால் திரும்பவும் வளர்ந்து விடும்.



○ ஆமைக்குப் பற்கள் இல்லை. எனவே, அதன் தாடையின் பலத்தைக் கொண்டுதான் இரையை நசுக்கி உட்கொள்ளுகிறது.



எல்லா உயிரினங்களின் உடல் வளர்ச்சியும் குறிப்பிட்ட வயதில் நின்று விடும். ஆனால், ஆமையின் உடல் அதன் ஆயுள் உள்ள அளவும் வளர்ந்துகொண்டேயிருக்கும்!




உலகில் அதிகக் காலம் உயிர் வாழ்வது ஆமைதான்! —சுமார் 300 ஆண்டுகள்!

⬆ நில ஆமைகளில் மிகவும் பெரிதாக வளரக் கூடியது 'காலபோகஸ்' ராட்சச ஆமை. சுமார் 400 கிலோ எடை இருக்கும்! 'காலபோகஸ்' தீவில் இந்த ஆமைகள் வாழ்கின்றன.

'டொங்கா' நாட்டில் இருந்த 200 வயதான 'தூய் மலியஸ்' என்னும் ஓர் ஆமை, சமீபத்தில் இறந்தது. அந்த நாட்டு மக்கள், அதை ஒரு தெய்வமாகவே மதித்து வணங்கி வந்தார்கள். 'கேப்டன் குக்' என்னும் மாலுமி, 1777-ஆம் ஆண்டு, அந்த நாட்டிக்கு வந்தபோது, அந்த நாட்டு மன்னருக்கு அவர் பரிசாக அளித்த ஆமைதான் அது! ➡




2




சுமார் 20 செ.மீ. நீளம் வளரக் கூடியது 'பெட்டி ஆமை'. இதற்கு மேலும் கீழும் மூடியுள்ள மிக உறுதியான ஓடு இருக்கும். தலையையும் கால்களையும் உள்ளே இழுத்துக் கொண்டால் பெட்டி ஆமையை ஒரு முதலை கூட கடித்துவிட முடியாது. அது தன் எடையைப் போல் 200 மடங்கு பளுவைத் தாங்கும்! ஒரு மனிதனுக்கு இவ்வளவு தாங்கும் திறன் இருந்தால், அவன் இரண்டு யானைகளைத் தூக்கமுடியும்!

ஆமை முட்டைகள், உருண்டை வடிவிலும், கோழிமுட்டை வடிவிலும் இருக்கும். கடல் ஆமை, ஒரு நேரத்தில் 200 முட்டைகள் வரை இடும். இவற்றில் பெரும் பகுதியைப் பருந்துகளும் நாய்களும் கவர்ந்து சென்று விடும். 200 முட்டைகளில் 1 அல்லது 2 மட்டுமே தப்பிப் பிழைக்கும்!







கடல் ஆமைகள், கடற்கரை ஓரங்களில் பள்ளம் தோண்டி, சுமார் 5 செ.மீ. குறுக்களவுள்ள முட்டைகளை இட்டு, மணலால் மூடி விடுகின்றன. சுமார் 2 மாதங்களுக்குப் பிறகு, குஞ்சுகள் வெளி வருகின்றன. வெளிவந்ததும் உடனடியாகக் கடலுக்குச் சென்று விடுகின்றன!




முட்டையிலிருந்து வெளிவருவது ஆண் ஆமையா, பெண் ஆமையா என்பதை, முட்டைகள் இடப்பட்ட இடத்தின் தட்ப வெப்பத்தைக்கொண்டே சொல்லி விடலாம் என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். வெப்பம் அதிகமாக இருந்தால் வெளிவருவது ஆண் ஆமை; வெப்பம் குறைவாக இருந்தால் வெளிவருவது பெண் ஆமை.

○ கடல் ஆமைகள் பெரும்பாலும் இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்று முட்டையிடுகின்றன. ஒரு வருடம் ஒரு குறிப்பிட்ட கடற்கரைப் பகுதிக்கு முட்டையிட வரும் பெண் ஆமைகள், அடுத்த வருடம் அதே நேரத்தில் அதே இடத்திற்குச் சரியாக வந்து முட்டையிடுகின்றன. ஆமையின் மூளையில் உள்ள காந்தத் தன்மையுள்ள துகள்கள் மூலம் ஓர் இடத்தைப் பற்றிய நில காந்த அளவீடுகளைக் கொண்டு அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.








○ ஓர் ஆமையை, மற்றோர் ஆமை சண்டை போட்டுக் கொன்றுவிட முடியாது. பலமுள்ள ஆமை, மற்றதை வயிறு பக்கம் மேலே இருக்கும்படி மல்லாந்து விழச் செய்துவிட்டுப் போய்விடும். மல்லாந்த ஆமை திரும்பவும் கவிழமுடியாமல் அப்படியே விறைத்துச் செத்துவிடும்!


உலகிலுள்ள அனைத்து ஊர்வனவற்றின் மாமிசங்களிலெல்லாம் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுவது கடலில் வாழும் பச்சை ஆமையின் மாமிசம்தான். இதன் கொழுப்பு பச்சை நிறமாக இருக்கும். இது தாவர உணவு மட்டுமே தின்னும்.



○ அதிசயப் பிறவி மாதிரி, சில சமயம் இரண்டுதலை ஆமைகளும் இருப்பதுண்டு.

சீனாவிலும் அமெரிக்காவிலும் பலரும் பூனை நாய் போன்று ஆமைகளையும் செல்லப் பிராணிகளாக வளர்க்கிறார்கள்.






○ கடல் ஆமைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று, இப்போது அவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆயிரக் கணக்கான ஆமை முட்டைகளைச் சேகரித்து, குஞ்சு பொரிக்க வைத்துக் கடலில் விடுகிறார்கள். தமிழ்நாட்டில் கோடிக்கரை, ஆற்காடுதுறை, வானவன் மகாதேவி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் கடல் ஆமை பாதுகாப்பு நிலையங்கள் இருக்கின்றன.

4

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

ஆர்த்தியின் ரிசல்ட்



அன்றைக்கு ரிசல்ட். ஆர்வமாகப் பள்ளியை நோக்கி நடந்தாள் ஆர்த்தி. எதிரில் மகிழ்ச்சியுடன் வந்த ஆனந்தியின் முகம் ஆர்த்தியைக் கண்டதும் மாறியது.

ஆனந்தியைப் பார்த்து விட்ட ஆர்த்தி, "என்னடி, ரிசல்ட் என்ன? நீ பாஸ் ஆகி விட்டாயா?" என்று ஆர்வமாகக் கேட்டாள்.

ஆனந்தி தயங்கித் தயங்கி "நான் பாஸ் தாண்டி. ஆனா ஆர்த்தி, நீ பெயிலாயிட்டேடி!" என்று கூறினாள்.

இடி இறங்கின மாதிரி அதிர்ந்தாள் ஆர்த்தி. பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு திரும்பி வீட்டை நோக்கி ஓடினாள்.

அம்மாவைக் கண்டதும் துக்கத்தை அடக்க முடியாமல் கேவிக் கேவி அழுதாள். அம்மா பரிவோடு அணைத்துக் கொண்டு நடந்ததைக் கேட்டறிந்தாள்.

"ஆர்த்தி, ரிசல்ட்டை நீ கண்ணால் பார்த்தியா?" என்று கேட்டாள் அம்மா.

"ஆனந்தி என் உயிர்த் தோழியாச்சே! அவள் பார்த்தா போதாதா? அவள் எதுக்கு பொய் சொல்லப் போறாள்?" என்றாள் ஆர்த்தி.

"இப்படி அசடா இருக்கியே! எதுக்கும் நாமே போய்ப் பார்த்துவிட்டு வரலாம்" என்றவுடன் ஆர்த்தி அம்மாவுடன் பள்ளிக்கு நடந்தாள்.

முதலில் ஆறாம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் பட்டியலில் ஆர்த்தியின் பெயர் இருக்கிறதா? என்று தேடினாள் அம்மா. இல்லை. பிறகு தேர்ச்சி பெற்றவர்களின் பட்டியலைப் பார்த்தாள். அகிலா... அலமேலு... அமுதா... ஆனந்தி... அருணா... பானுரேகா என்று நீண்டது பட்டியல்.


ஆனந்திக்கு அடுத்து இருக்க வேண்டிய ஆர்த்தியின் பெயரைக் காணவில்லை. மறுபடியும் பட்டியலின் தொடக்கத்திலிருந்து கவனமாகப் பார்த்தாள். வரிசை எண் நான்குக்குப் பின் வரிசை எண் ஆறு இருந்தது. அப்படியானால் வரிசை எண் ஐந்து என்ன ஆயிற்று? பரபரப்புடன் வரிசை எண் பட்டியலின் இறுதிக்கு வந்தாள். வரிசை எண் அறுபதுக்குப் பின் பேனாவால் வரிசை எண் ஐந்து ஆர். ஆர்த்தி, தேர்வு எண் முந்நூற்றி அறுபது என்று எழுதப்பட்டிருந்தது!

டைப்பிங்கில் நடந்த தவறு பின்னர் சரி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், ஆனந்தி தன் பெயருக்கு அடுத்து ஆர்த்தியின் பெயர் இல்லாததைக் கண்டு அவசரத்தில் அவள் பெயில் ஆகிவிட்டதாக எண்ணி விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டாள் அம்மா.

ஆர்த்தியை அழைத்து அவள் தேர்ச்சி பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டினாள் அம்மா. அழுது வீங்கியிருந்த ஆர்த்தியின் முகத்தில் லேசாக சிரிப்பு அரும்பியது.

ஆர்த்தியை மேலும் கலகலப்பாக்க எண்ணிய அம்மா வீட்டை அடைந்ததும், "அழுத பிள்ளை சிரிச்சதாம்... கழுதைப் பாலைக் குடிச்சதாம்" என்று கேலி செய்யவும் ஆர்த்தி விழுந்து, விழுந்து சிரித்தாள்.

- ப. செண்பக முருகன்,
சின்னாளப்பட்டி.



✉ 'பூனைக்கு வரி போட்ட பூபதி' படக் கதையைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. சசியின் ஓவியம் அருமை. – விருத்தாசலம் வி. பிரபாகர், பிரசன்னா, கோகுல், தோப் புத்துறை, ஆனந்தராஜ், கடலூர் அகிலா, ஈஸ் வரி, கும்பகோணம் ஆர். வித்யாவதி ஈரோடு. ஈ.பா. ரோகிணி

✉ 'உதயன் எங்கே?' தொடர் விறுவிறுப் பாக இருந்தது. அடுத்த இதழில் கதை முடிந் தாலும் உதயன் எங்கள் மனத்தில் நீங்காது இருப்பான். – விருத்தாசலம் வி. பிரபாகர், ஆர். கோகுல், மானாமதுரை கவிதா, மதுரை திலகவதி, இரணியல் செந்தில்.

தொல்லையால் வந்த தொல்லை!

✉ அறிவியல் கட்டு ரைக்கு எப்பொழுதுமே தனியிடம் உண்டு. கரிச்சான் எப்பொழுது எழும்? சுவையான பல செய்திகளைத் தந்தது. – திருவாடனை மேரி, வல்லம் பாத்திமா, ஒத்தக்கடை பிர சாத், பாளையங்கோட்டை கண்ணன்.

✉ ஆழியின் 'அறிவியல் சாதனைகள்' கட் டுரையும் படங்களும் மிக அருமை. – சின்ன சேலம் ஆர். பிரசன்னகுமார், ஆர். கோகுல கிருஷ்ணன், வேடச்சந்தூர் எஸ். இப்ராஹிம், இராமநாதபுரம் பி. விமலா ராணி, மேட்டுப் பாளையம் மே. தே. பார்த்திபன்.

✉ மு. துரைராசனின் 'ஆணவம் அழிந்தது' கதை, ஓர் அறிவியல் உண்மையை வைத்து அழகாக எழுதப்பட்டுள்ளது. – மேட்டுப் பாளையம் மே. தே. பார்த்திபன், புளியங் குடி ப. சாந்தி, கிழக்கரை பீட்டர் ராஜ், விழுதரெட்டி க. அன்பழகன்.

✉ வண்ண வண்ண லேபிள்கள் இப் போது எங்கள் பாடப் புத்தகங்களை அலங் கரிக்கின்றன. பயனுள்ள பரிசு. – சேத்தியாத் தோப்பு அக்பர், நெய்வேலி பாலமுரளி, திருச்செந்தூர் பி. ராதா, வெளிப்பட்டணம் ஜூலி, சின்ன சேலம். ஆர். பிரசன்னா, கோகுல்.

✉ 'ஈட்டிமுடியார் சாபம்' உண்மை யிலேயே திக்திக் கதைதான். விறுவிறுப்பாக இருந்தது. அடுத்த இதழை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். – திருமூகூர் சண்முகப்ரியா, மன்னார்குடி பா. மைதிலி, ஸ்ரீவில்லிபுத்தூர் வி. அடைக்கலமேரி, பெரியகுளம். எம். நூர்ஜஹான்.

✉ உழைப்பின் உயர்வை எடுத்துக்காட் டியது ஜானகிமணாளன் எழுதிய 'எனக் குத்தான் பெரிய குவியல்'. – காட்டுமன்னார் கோவில் வெ. சரவணன், சேலம் சி. துர்க்கா, உடுமலைப் பேட்டை க. கல் பனா, பரங்கிமலை தியாகு.

✉ 'அக்கா எழுதிய கவிதை', எஸ்.ஆர்.ஜி. சுந்தரம் நாடகம் சுவாரசியமாக நகர்ந்தது. – கல்பாக்கம் ஜி. பவித்ரா, ஜே. ஜோசப் கல்லனை, அருப்புக் கோட்டை ம. சித்ரா, மைலாடுதுறை அப் துல் ஹமீது.

✉ ஜூலை இதழில் கேட்கட்டுமா டாக் டர்? பகுதியில் கெ. சின்னதுரை பரமா நந்தல் கேட்டுள்ள கேள்வியும் அதற்குத் தந் துள்ள பதிலிலும் உள்ள 'தொல்லை' 'தொப்பை என்றிருக்க வேண்டும் என நினைக்கிறேன். சரிதானே! திண்டுக்கல் மு. பாலகுமார், விருதுநகர் எஸ். ராஜபாண்டி, மேட்டுப்பாளையம் அன்னம்மாள் மற்றும் பலர்.

(உங்கள் ஊகம் சரிதான். தொப்பை தொல்லையாகி, பெரிய தொல்லையாகி விட்டது! தொப்பை என்பதே சரி. கவனக்குறைவுக்கு வருந்துகிறோம். – ஆசிரியர்)

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று, அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



பொன்விழா காணும் கொடி இது!
பட்டொளி வீசிடப் போகுது!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

